தனிச்சுற்றுக்கு மட்டும்

# காற்றுவெளி

● ஆவணி - 2025

கலை இலக்கிய இதழ்



# காற்றுவெளி

**கலை இலக்கிய இதழ்**

ஆவணி - 2025

படைப்புக்கள் அனுப்ப :

Mullaiamuthan1954@hotmail.com

mahendran1954@hotmail.com

படைப்புகளின் கருத்துக்களுக்கு
படைப்பாளர்களே பொறுப்பு.

நன்றி: கனிவுமதி

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- வருட சந்தா : 12.00 பவுண்ட்
- வங்கி இலக்கம் :
  R.Mahendran,
  A/C No : 90759821
  Sort.Code : 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


**வணக்கம்,**

யாவரும் நலமா?

காற்றுவெளி ஆவணி மாத இதழ்(2025) தங்கள் பார்வைக்கு வருகிறது.

தொடர்ந்து படைப்புக்கள் தந்துவும் படைப்பாளர்களுக்கு எமது நன்றி.

காற்றுவெளி இதழை அச்சில் கொண்டுவரும் முயற்சி தொடர்ந்து தள்ளிப்போடப்பட்டுக்கொண்டே வருகிறது.

அண்மையில் வெளியிடப்பட்ட இங்கிலாந்து சிறப்பிதழ் மூலம் கிடைத்த அனுபவமும் ஒரு காரணம்.புலம்பெயர் நாடுகளில் வெளிவரும் இலவச இதழ்களின் தாக்கம் கலை இலக்கிய இதழை விளம்பரங்கள் ஏதுமின்றி வெளியிடுவதில் ஏற்படும் சிரமங்கள் பலரும் அறிந்ததே.

எமது பலம் நம்பிக்கை மட்டுமே.அந்த நம்பிக்கையே இதுவரை வெளியிடக் காரணம்.

காற்றுவெளி இதழை அனுப்பச்சொல்லி கேட்டும் சஞ்சிகைகளின் ஆசிரியர்கள் தங்களின் சஞ்சிகைகளுக்கு சந்தா அனுப்பச் சொல்லிக் கேட்பது நியாயமாகப்படவில்லை.

சந்தா கட்டவேண்டும் எனும் ஆர்வமுள்ளவர்களைக்கூட புலம்பெயர்நாடுகளில் வரும் இதழ்களுக்கு ஏன் சந்தா கட்டுகிறீர்கள் என கேட்பவர்களும் உண்டு.மாறாக அப்படிச் சொல்பவர்களே தங்களின் இலக்கியமுயற்சிகளுக்கு இலவசமாகவும், நிதிப்பங்களிப்பு கேட்டும் அணுகுகிறார்கள்.

இவர்களையும் கடந்துதான் காற்றுவெளி பயணிக்கிறது.

உலகில் ஏற்பட்டுள்ள போர் அச்சம், நீ பெரிசு-நான் பெரிசு என யுத்தமுனைப்போட்டியும் மக்களை அச்சத்திலேயே வாழவைக்கிறது.

பிராந்திய வல்லாதிக்கப் போட்டிகள்,இனக்குழுமங்களை மெலெழும்பவிடாதபடி அழிக்கின்ற முயற்சிகள்.. நம் கண்முன்னே காணக்கூடியதாக இருக்கிறது.

ஈழத்தமிழர்களின் கனவையும் அழித்துவிடும் முயற்சியே தொடர்கிறது.

காலம் மீதான நம்பிக்கை இன்னும் தொடர்கிறது.

நட்புடன்,

சோபா

*01/08/2025*

# படைப்பாளர்கள்

**கவிதைகள்**

1. த.சு.மணியம்
2. த.ரவீந்திரன்
3. ஐ.தர்மசிங்
4. ஜமீல்
5. க.புனிதன்
6. கோபால்தாசன்
7. நஸார் இஜாஸ்
8. வட்டக்கச்சி வினோத்
9. DR.ஜலீலா முஸம்மில்
10. ச.ஆனந்தகுமார்
11. இரா.வெங்கடேஸ் குமார்
12. மலர்மகள்
13. சாந்தி மாரியப்பன்.
14. சேஹு மொஹம்மது பெனாஸிரா
15. குமுளன்
16. மெய்யன் நடராஜ்
17. ச. இராஜ்குமார்
18. ரா.சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்
19. புதுகை ஆதீரா
20. ரகுநாத் வ
21. கனகசபாபதி செல்வநேசன்(அல்வாய்)
22. மு. பிரபு, வேலூர்
23. இளையவன் சிவா
24. யுகசேனன்
25. ஜெயதேவன்

**சிறுகதைகள்**

1. கார்த்தி டாவின்சி
2. முல்லைக்கமல்
3. பாலமுருகன்.லோ
4. கமலினிகதிர் (சுவீஸ்)
5. நீலம் மூன்
6. மீ.யூசுப் ஜாகிர்,வந்தவாசி
7. ஜெனனி. மோ
8. சந்திரா மனோகரன்

**கட்டுரைகள்**

1. இரா.சீ .பாலகுமார்.M.A
2. கவிச்சுடர் காத்தான்குடி எம்.எம்.ஜுனைதீன்



த.சு.மணியம்

# உலகம் சிரிக்கிறது

தத்துவம் அத்தனை முத்தெனப் பேசினேன்
வித்தகம் சொல்லியே நர்த்தனமாடினன்
நித்தமும் பெற்றகம் ஏதெனக் கேட்டனன்
நித்தியம் அற்றதாய் சத்தியம் செய்தனன்.

சோந்தங்கள் என்பதில் பாதியைத் தந்தனன்
பந்தங்கள் என்பதை வேதனை என்றனன்
தந்தங்கள் காட்டியே தன்நிலை கூறினன்
குந்தகம் செய்வதாய் வீண்வசை பேசினன்.

தந்தையும் தாயையும் நல்லவர் என்றனன்
சந்தையில் மரக்கறி விற்பதாய் சொன்னனன்
முந்தையின் செய்வினை அவர் விதி என்றனன்
கந்தையைக் கட்டியே வாழ்வதாய் இயம்பினன்.

பூட்டிய மாட்டினின் காலினில் வீழ்ந்தனன்
காட்டிய பாதையில் நிழலென நடந்தனன்
மூட்டிய நெருப்பது முற்றையும் துறந்தனன்
மீட்டியே பார்த்தவன் பைத்தியம் ஆகினன்.

தந்தையும் தாயொடு தொடர்புகள் அற்றனன்
விந்தையாய் வந்தவள் சந்தியில் விட்டனள்
மந்திபோல் குந்தியே சந்தியில் இருந்தனன்
வந்தவன் போறவன் பார்த்துச் சிரித்தனன்.

த. ரவீந்திரன்..

# தெளியாத போதை..

திறந்திட மறுக்கும் கதவுகளையே
தட்டுகிறது மெய்யன்பு..


தானாக நிகழ்வதில்லை தேடிச்சென்றே
அவமானப்படுகிறது மானங்கெட்ட மனம்..

அன்பின் நிமித்தமான அவமானம்
பெருமழையில் கையிலேந்தும்
தேநீர் கோப்பை போன்றது..

எப்போதும் தெளிவதில்லை
இந்த அன்பின் போதை..

ஐ.தர்மசிங், நாகர்கோவில்

# பிரியங்களின் பேரமைதி



முதன் முதலாக
பிஞ்சுக் குழந்தையை
வகுப்பறையில் நுழைத்து விட்டு
கதறல் சப்தத்தின் மிச்சங்களோடு
வீடு திரும்பும்
அம்மாவின் முகத்திலும்

மணம் முடித்து
கணவன் வீடு திரும்பும்
கண்ணாக வளர்த்த மகளின்
கால்கள் போகும் திசையை
இமைகள் கொட்டாமல்
பார்த்து தவிக்கும்
தந்தையின் முகத்திலும்

ஆழ்மன கனவுகளோடு
அந்நிய நாடு திரும்பும்
காதல் கணவனிடம்
உடைந்த வார்த்தைகளை
கொடுத்து அனுப்பி விட்டு
வெறுமையை சுமந்து வரும்
மனைவியின் முகத்திலும்

முதியோர் இல்லத்தில்
சுமையாக இறைக்கிவிட்டு
வீடு திரும்பும் மகனின் உருவத்தை
திரும்பித் திரும்பிப் பார்க்கும்
தாயின் முகத்திலும்

தள்ளாத வயதில்
தனக்கு எல்லாமுமாக இருந்த
மனைவியை சுமந்து செல்லும்
சவப்பெட்டியை பார்த்து
கையறு நிலையில்
கதிகலங்கி நிற்கும்
வயதானவரின் முகத்திலும்

நிழலாய் படர்ந்திருக்கும்
மௌனங்கள்
வெவ்வேறு நிலைகளை
வெளிப்படுத்துவதை

நுணுக்கமாக கவனித்தால்
புலப்படும்
எல்லா முகங்களிலும்
தென்படுவது
ஆற்றுப் படுத்த முடியாத
பிரியங்களின்
ஒரே பேரமைதி

ஜமீல்

# காற்று நல்லதொரு வாசகன்



ஆகக் குறைந்த பட்சம்
ஒரு சொல்லாவது வாசிக்காமல்
காலத்தின் பக்கங்களை
ஒரு போதும் மூடியதில்லை காற்று

அது மரங்களை மட்டும்தான்
வாசித்து தீர்க்க வேண்டுமென்று
கோட்பாடுகளை வகுத்ததில்லை

தன்னை கடந்து செல்லும்
தூசு துரும்புகள் முதற் கொண்டு
தேவதைகளின் கூந்தல் வரை
சலிக்காது வாசித்து தீர்க்கிறது

சில சமயம் வாசித்ததை
தரும்பத் திரும்ப வாசித்தல் தகும்
அதற்காக வியந்து வாசிக்கிறதென கருதிவிட
வேண்டாம்
மறந்து போயும் வாசித்திருக்கலாம்

இங்கு வாசிப்பதை தவிர
பெரிதாக காற்றுக்கு
வேறென்ன வேலை இருக்க கூடும்

ஒரு புத்தகத்தை கூட
இதுவரை வாங்கி வாசித்ததுமில்லை
யாரிடமும் வாங்கி கேட்டதுமில்லை
யாரும் அன்பளிப்பு செய்ததுமில்லை


வழமைபோல் நூலகமான காற்று
புத்தகங்களை வாசித்து முடித்த பின்
அதே இடத்தில் வைத்து விட்டு
உடன் திரும்பிச் செல்கிறது

ஆனால் மனிதன் ஆவ்வாறல்ல
வாசித்த கையோடு
அதனை திருடிச் செல்கிறான்

ஆதியிலிருந்து சிறந்த வாசகனாகவே
இருந்து வருகிறது காற்று

அதனை நாம்தான் வாசிக்காமல்
நமது வாசிப்பை குளப்புகிறதென்று சன்னல்களை
சாத்தி வருகிறோம்

# க. புனிதன் கவிதைகள்



**வாசனை**

எதிரி என நினைத்து
கண்ணாடியில் தனக்கு தானே
அலகில் கொத்தி கொள்ளும்
பறவை போல் அல்ல
பூனை
கண்ணாடியில் தன்
மேனி உரசி தன் வாசனை
கண்டுக் கொள்ளும்

❍

**சப்தம்**

சைக்கிளில் மாட்டிய
ஒரு மஞ்சள் பையில்
ஆற்று பாலம் கடந்து
கிராமத்து சாலை வழியே
நான்கு மைல்கள் தாண்டி
ஒரு மலை கிராமத்தில் உள்ள
வீட்டில்
பூனைக் குட்டியை
விட்டு வந்தேன்
எப்படியோ நான்கு ஐந்து நாளில்
திரும்ப என் வீடு தேடி வந்து விட்டது
இன்னும் எனக்கு
கேட்டு கொண்டிருக்கிறது
பாலத்தின் அடியில் ஓடும்
ஆற்றின் சப்தம்

❍

**கிழட்டு கொக்கின் சந்தோசம்**

என் மக்களின் நடனம்
என் மக்களின் பண்பாடு
என் மக்களின் வாதை
என் மக்களின் மொழி
என் மக்களின் இசை
என் மக்களின் சொல்
என் கவிதையில் இருக்கிறது

❍

அந்த கவிதையில் நான் வாழ்ந்த
கொஞ்சம் நிலமும் இருக்கிறது

என்றோ என் நிலத்தில் கடந்து போன
கிழட்டு கொக்கின் சந்தோசத்தைபற்றி
நான் எழுதிய கவிதையின் நினைவோடு
இன்று சாதாரணமாக கடக்கிறேன்

இது என்றோ நிகழ்த்திய ஒத்திகை தான்

# அன்பரசி

கார்த்தி டாவின்சி



1

**நா**ன் அப்படி என்ன செய்துவிட்டேன் அவளுக்கு?

எனக்குள் ஓடும் எண்ணங்களின் ஓடைகள் இணைந்து நதியாகி நடைப்போடும் இடத்திலிருந்து நான் உங்களிடம் இதைச் சொல்கிறேன். மனம் என்பது இப்படிக்கூட இருக்கும் என்று நான் புரிந்துக் கொண்டது அன்றுதான்.

அந்த நேரம் எனக்கு அப்படி அமையும் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. எப்படி எனில் ஒன்றை எதிர்பார்த்துக் கொண்டு ஒரு பாதையில் சில சிரமங்களுக்கு மத்தியில் செல்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். கடைசியில் நாம் எதிர்பார்த்தது அங்கில்லை. ஆனால்...

நான் முதலில் என்னிடமிருந்து தொடங்குகிறேன். நான் ஒன்றும் தனித்துவமானவன் இல்லை. எல்லா இளைஞர்களையும் போல நானும் ஒரு சாதாரண இளைஞன்தான். வெட்டியான பேச்சு இருந்தது. வழக்கமான நாட்களைக் கடத்தும் மனப்பாங்கு. வீட்டை விட்டு வெளியே வந்தால் நண்பர் கூட்டம். சும்மா மரத்தடியில் நின்று கொண்டு பசிக்கு உதவாத விஷயங்களை மணிக்கணக்கில் மனதார பேசிக் கொண்டிருப்போம்.

இன்றைய தேதிக்கு ஏற்றவாறு வெட்டி வைத்த சிகை. புதிய ரக ஆடைகள் அணிவதில் எங்கள் உடல் மாற்றங்களைப் பற்றிய எவ்வித கவலையும் இல்லை. இனி எந்த உடை புதிதாக விளம்பரம் பெறுகிறதோ அதையே அணிவது என்ற எண்ணத்தில்தான் இளைஞர்கள் அனைவருமே இருக்கிறோம்.

கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறேன். எங்கள் கல்லூரியின் கடைசி ஆண்டு. படிப்பு முடிவதற்கு இன்னும் சில மாதங்கள் உள்ளன. இதுவரை நாங்கள் கடந்து வந்த ஆண்டுகள் இரண்டில் எங்கள் வகுப்பு மாணவர்களுக்குள் எவ்வளவோ விசயங்கள் நடந்தன. அவற்றில் பெரிய விசயமே பெண்களிடம் பேசுவதுதான்.

சக மாணவர்களுடன் நின்று கொண்டு பேசுகையில் நிறையவே அரட்டைகள் எழும். ஆனால் பெண்களிடம் சாதாரணமாக பேசிவிட முடியாது. அப்படி யாரேனும் பேசினால் அதுவே எங்களுக்குள் கெத்து காட்டும் விசயமாக இருக்கும். ஏனெனில் பெண்களிடம் ஆண்கள் பேசக்கூடாது என்பது கல்லூரி நிர்வாகம் மாணவர்களுக்கு இட்ட கட்டுப்பாடு. ஆண்களுக்கும் பெண்களுக்கும் எதிர்பால் ஈர்ப்புள்ள இளம்பருவத்தில் பேசக்கூடாது என்ற விதி பெரும்சுமைதான். உணவு இடைவேளையில்கூட பெண்கள் வகுப்புக்கு வெளியே வந்து மைதானத்தில் உட்கார்ந்து உண்ணக்கூடாது என்பதும் ஒரு விதி. டீ பிரேக்கில் கழிப்பறைக்கு செல்வதைத் தவிர, மன்னிக்கவும், ஒன்னுக்கு பெல் என்று பள்ளியில் சொல்வதை, கல்லூரியில் டீ பிரேக் என்றுதான் சொல்ல வேண்டும், வேறு எதற்கும் பெண்கள் வெளியே அனுப்பப்பட மாட்டார்கள்.

அப்படிப்பட்ட கல்லூரியில் பயிலும் நாங்கள் அடிக்கடி பெண்களைத் திரும்பிப் பார்ப்போம். அவர்களும் ஓரக் கண்ணால் பார்ப்பார்கள். பசங்களில் ஆளுக்கு ஒரு முகம் பார்த்து வைத்துக் கொள்வார்கள். அப்படித்தான் நானும் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். இதில் எத்தனை முறை பார்த்தேன் என்பது எனக்கு தெரியாது. கிடைக்கும் நேரமெல்லாம் பார்ப்பதும் நான் உன்னைப் பார்க்கிறேன் என்று அவளை எண்ண வைப்பதும் அடிக்கடி நடக்கும்.

‘இன்னிக்கு என்ன சொன்னா? நீ என்ன சொன்ன? வேற என்ன சொன்ன? அடுத்து என்ன பண்ணப் போறீங்க?’ இதெல்லாம் பசங்களுக்குள் பேசிக் கொள்வோம் எனில் கிடைக்கும் அவகாசத்தில் பெருசாக ஒன்னும் பேச முடியாது. எதாவது சொல்லலாம். அவ்வளவுதான். இதெல்லாம் அந்த டீ ப்ரேக் நேரத்தில் வகுப்பறைகளுக்கு வெளியே வராண்டாவில் ஆசிரியர்கள் வந்து கண்காணிப்பிற்கு நிற்கும் வரையில்தான். நின்றுவிட்டபின் பேசுகிறோம் என்று தெரிந்தால் உடனே அதிரடி ஆக்சனில் இறங்குவார்கள் ஆசிரியர்கள்.

முதலில் எங்கள் அடையாள அட்டையைப் பிடுங்கிக் கொண்டு சென்று விடுவர். டிபார்ட்மெண்ட்ல வந்து என்ன பாரு, எச்.ஓ.டியை பார்த்துட்டு வாங்கிகோ என்று பலவிதமாக சொல்லி தனிமைப்படுத்துவர். கேள்வி கேட்டு குடைவர். பதட்டப்பட்ட சூழலிலேயே வைத்திருப்பர்.

பிறகு மனம் வந்தபின் அடையாள அட்டையைக் கொடுத்து அனுப்பி விடுவர். இல்லை என்றால், ஒருவேளை ஏதேனும் அதிகமாக பேசிவிட்டோமானால் எச்.ஓ.டியிடமிருந்து பிரின்சிபல். அவரிடமும் ஏதாவது பேசிவிட்டால் கடைசியாக கரஸ்பாண்டன்டிடம் போக வேண்டும். மாணவர்களை எப்படி மடக்கி பிடித்து பேசி வழிக்கு கொண்டு வர வேண்டும் என்பது அவர்களுக்கு மிக நன்றாக தெரியும்.

இந்தக் கழுகு கொத்தும் பிரச்சனைகளுக்குள் மாட்டிக்கொண்டு விடாமல்தான் நாங்கள் பெரும்பாலும் பேசுவோம். அதனால் மிக சொற்பமாகத்தான் பேச முடியும். பெரிதாக எதுவும் பேசிவிட முடியாது. எதையாவது சொல்லலாம். அவ்வளவுதான். அதுவே மிகப் பெரிய விசயம் எங்களுக்கு.

முதல் நாள் நான் அவளைப் பார்த்தபோது முதலாம் ஆண்டு மாணவன். சரி, இவள் என்னைப் பார்க்கிற ஆள் என்பதை நான் உறுதிப்படுத்திக் கொள்ளவே இரண்டாம் ஆண்டுவரை எனக்கு தேவைப்பட்டு விட்டது. நானும் உன்னைப் பார்க்கிறேன் என்பதைத் தெரியப்படுத்தவும் அதே கால அவகாசம்தான்.

நான் அடிக்கடி பார்க்கும் அந்த பெண் தனம். தனு என்று பெயர் சொல்லிதான் வகுப்பில் கூப்பிடுவோம். அழகுக்கு ஒன்றும் குறைச்சல் இல்லை. கவியான முகம்தான். அதென்னவோ அவளைப் பார்த்த மாத்திரத்தில் பிடித்து விட்டது. இரண்டு ஆண்டுகளில் சில முறைகள்தான் பேசினேன். பெரும்பாலும் பார்வை மூலம் செய்தி பரிமாற்றம்தான்.

தேவதைதான் அவள். நான் அப்படித்தான் நினைக்க வேண்டும். எல்லா சக இளைஞர்கள்போல தேவதை என்று சொல்ல வேண்டும். கவிதை வரவில்லை என்றாலும் பரவாயில்லை. ஏதேனும் சில வரிகளையேனும் கசக்கிப் பிழிந்து எழுத வேண்டும். அவளது கண்முன் நான் கதாநாயகனாக தெரிய வேண்டும். இதெல்லாம் என்றைக்கும் இருக்கும் நடப்பு வழக்கு.

ஆனால் இன்றைய இளைஞர்களுக்கு சவால்கள் சற்று அதிகம். நேரில் பார்த்து உருவம் ஓகே ஆனப்பிறகு செல்போனில் முதலில் பழக வேண்டும். ஹாய் மெசேஜ்களுக்கு உடனடி பதில் கொடுக்க வேண்டும். ஸ்டேட்டஸ்களுக்கு ஹார்ட்டின் போட வேண்டும். குட் மார்னிங் முதல் குட் நைட் வரை அனுப்பி குட் பாயாக இருந்திட வேண்டும். செல்போனில் குடும்பம் நடத்திட வேண்டும். அவளை எனக்கானவள் என்று நான் நம்ப வேண்டும். தனக்கானவன் என்று அவளை நம்ப வைக்க வேண்டும். நானும் இப்படித்தான் எல்லோரையும்போல் நடந்துக்கொண்டேன். என்ன... நேரடியாக சொல்லவில்லை. அவ்வளவுதான்.

இடையில் சாதி, மதம், அந்தஸ்து என்பதெல்லாம் வாகனத்தின் ஸ்டார்டிங் ட்ரபுள் போன்று. பிரச்சனையாக மாறினால் ரிப்பேர்தான் செய்ய வேண்டும். ஆனால் சிலரால் தூசியைத் தட்டி விடுவதுபோல இவற்றை ஊதித்தள்ளி விட முடியும்.

என்னையே நான் கேட்டுக் கொண்டேன். அவளிடம் சொல்லி விடலாமா? இல்லை, பிறகு பார்த்துக் கொள்ளலாமா என்று. இப்படி எனக்குள் அடிக்கடி தோன்றும். இதற்கும் என் வாழ்வின் ஓராண்டு தேவைப்பட்டு விட்டது. தற்போது நான் மூன்றாம் ஆண்டு மாணவன். இனி சொல்லிவிட வேண்டியதுதான்.

சொல்லிவிட எண்ணித்தான் நான் தைரியப்பட்டேன். எப்படி சொல்வது என்பதைவிட எங்கு வைத்து சொல்வது என்பதுதான் எனக்கு பிரச்சனையே. போனிலேயே எளிமையாக சொல்லிவிடலாம். ஆனால் லவ் யூ டூ என்று பதில் அனுப்பிவிட்டால் எல்லாம் பாழ். ஒரு நாளில் எனக்குத் தெரிந்து இந்த லவ் யூ, லவ் யூ டூ வாசகங்களை பலரும் செல்போன் செய்திகளில் வாரி இறைக்கிறார்கள். அவற்றில் ஒன்றாக என் காதல் தெரிவிப்பு இருந்துவிடக் கூடாது. அது எனக்கு ரொம்ப முக்கியமாகப்பட்டது. ஆக, செல்போன் வழி காதல் தெரிவிப்பு இல்லை.

அடுத்தது எனக்கு இருக்கும் ஒரே வாய்ப்பு, கல்லூரியிலேயே சமயம் பார்த்து திக்காமல் திணராமல் சொல்ல வேண்டும். அதுவும் எனக்கு ரொம்ப முக்கியம். தனிமையில், மற்ற சிக்கல் ஏதுமின்றி சொல்ல வேண்டும். நான் சொல்லும்போது அவளது முகவதனம் வெட்கப்படுவதை ரசிக்க வேண்டும். இப்படி பலவிதமான எதிர்பார்ப்புகளைச் சுமந்துக் கொண்டுதான் நான் தயாராகினேன்.

நாள் குறித்து விட்டேன். இடம் தேடி அலைகையில் தானாக அமைந்தது அந்த அறை. ஆசிரியர்கள் இல்லாத தனி அறை. அங்கே அதிகம் வரமாட்டார்கள். ஏனெனில் அப்போது கல்லூரியில் கலை நிகழ்ச்சிகளுக்கான பயிற்சி மும்முரத்தில் இருந்தது. மாணவர்களின் தேவையற்ற பொருட்களை வைக்கும் சிறிய அறை அது. அங்கே வைத்து காதல் சொன்னால் ரொமான்டிக்காக இருக்குமா? என்ற எண்ணம் எனக்குள். ஆனால் மூன்றாம் ஆண்டு நடப்பில் பாக்கியிருக்கின்ற, ஜோடி சேரா நவீன காலத்து இளம்முனிவர்களில் நானும் ஒருவனாக ஆகிவிடக் கூடாது என்றும் மிச்சம் இருக்கும் சில மாதங்களை அவளுடன் காதல் பேச்சுகள் பேச வேண்டும் என்றும் பிறகு கல்லூரி

முடிந்து சில நாட்கள் கழித்து மணம் புரிந்துக்கொள்ள வேண்டும் என்றும் எனக்குள் எண்ணங்கள்.

எண்ணப்படி அறை காலி. ஆசிரியர்களும் இல்லை. எப்படியோ எனது அழைப்பு அவளிடம் தெரிவிக்கப்பட்டு விட்டது. கலை நிகழ்ச்சிகளுக்காக நிறைய பேருக்கு அனுமதி அளிக்கப்பட்டு பயிற்சி எடுக்க அனுப்பப்பட்டனர். அவர்கள் சென்ற இடங்களில் ஆட்கள் நிறைந்து விட சிலர் மட்டும் தனியாக பயிற்சி எடுக்க வந்தனர். அவர்களில் எங்கள் வகுப்பினரும் இருந்தது தான் எனக்கு வசதியாய் போனது. எதிர்பார்த்தபடி அறைக்குள் நான் இருக்க தனு வந்தாள்.

‘என்னடா விசயம்? தனியால்லாம் கூப்பிடுற அளவுக்கு...’ சத்தமாக கேட்டுக் கொண்டே வந்தாள். ஆசிரியர்கள்தான் இல்லையே அதனால் தைரியமாக பேசினாள். நான் திக்காமல் திணறாமல் அவளிடம் சொல்லிவிட எண்ணிக் கொண்டிருந்தேன். இதுதான் சமயம், நயம் பட உரை என்று மனது கிளர்ச்சி மூட்டியது.

‘வேற என்ன. லவ் சொல்லத்தான்.’ நான் பட்டெனச் சொன்னேன். ஆனால் அவளிடம் காதல் பற்றிய எந்த அறிகுறியுமே தென்படவில்லை ஒரே நொடி மட்டும்தான் அவள் உறைந்து போனாள்.

‘அட போடா இவனே...’ வசைந்தாள். ‘லவ் சொல்றியா? யாருக்கு?’ கல் முகத்தோடு கேட்டாள்.

‘உனக்குத்தான்.’ நான் சொன்னேன்.

‘எனக்கு..? நீ..? இப்ப..? போடா போடா அரவேக்காடு. எனக்கு எங்கேஜ்மென்ட் ஆகி மூணு வருசம் ஆகுது. காலேஜ் சேர்றதுக்கு முன்னாடியே,’ என்றாள் கோபமாக. எனக்குள் அணுகுண்டு வெடித்தது போல் இருந்தது.

‘எங்கேஜ்மென்டா..?’ அப்போது எனக்கு வாயில் வந்த ஒரே சொல் இதுதான். இதை வைத்தே நான் அதிர்ச்சியில் உறைந்துவிட்டேன் என்பதை அவளும் புரிந்துக் கொண்டாள்.

‘ஆமா. காலேஜ் முடிச்சுட்டு கல்யாணம் பண்ண போறோம்.’ அவள் சாதாரணமாகத்தான் சொல்கிறாள். இப்போது நான்தான் உறைந்த நிலையிலே நிற்கிறேன்.

‘இது தெரியாம லவ்வு கிவ்வுனு வந்து நிக்கிற. அதுவும் என்கிட்ட. உனக்கு உண்மையாவே யாருன்னு தெரியலையா? எனக்கு கல்யாணம் நடக்கும்போது சொல்றேன். அதுக்குள்ள தாடி தண்ணி தம்முன்னு எதுவும் ட்ரை பண்ணிக்காத. அப்புறம் நாந்தான் காரணம்னு கில்ட்டி ஃபீல் வந்துடும் பாத்துக்க.’ அவள் எச்சரித்தாள். இது இப்படி நடக்கக்கூடாதே என்று தோன்றியது. நான் எதிர்பார்த்து காத்திருந்ததெல்லாம் இங்கே தவிடுபொடியாகிக் கொண்டிருக்கிறது.

‘உன்ன மாதிரிதான் அவனும். பிளஸ் டூ முடிச்சுட்டு நான் வீட்டில் இருந்தப்ப குடும்பத்தோட வந்துட்டான். செம்ம ஸ்மார்ட்டா இருந்தான். பொண்ணு கேட்டான். காலேஜ் படிக்கணும்னு நான் அடம் பிடிச்சேன். தாராளமானு சொல்லிட்டான். அதனாலயும் அவனை எனக்கு புடிச்சிருந்துச்சு. மூணு வருச லவ்வு. நாங்க வாட்சப்லயே ஃபேமிலி ரன் பண்ண ஆரம்பிச்சிட்டோம் தெரியுமா. நடுவுல சம்பந்தமே இல்லாம நீ வேற லைக்கா போட்டு தள்ளுற. உன்னை நான் கேட்டனாடா? எதுவும் தெரியாம நீ பாட்டுக்கு லவ்வுன்னு வந்து நிக்கிற.’ தன் காதல் கதையைச் சொல்லியபடியே டீசன்டாக திட்டிக்கொண்டிருக்கிறாள். நான்தான் நொறுங்கிக் கொண்டிருந்தேன்.

‘அப்போ என்ன பார்த்ததெல்லாம்..?’ நான் பதறலாய் கேட்டேன்.

‘இப்படித்தான் சொல்லுவனு எனக்கு தெரியுமடா. எதுக்கு இவன் இத்தனை முறை நம்மள லுக்கு வுடறானேனு டவுட்டுல பார்த்தேன். அப்புறம் எங்க இவனும் நம்பல காதலிக்கிறேன்னு பொண்ணு கேட்டு வந்துடுவானோன்னு ஃபிரண்ட்லியா பாத்தேன். நல்லவேளை. உன்கிட்டயும் இதுக்கு முன்ன எந்த லவ் சைனும் தெரியல. இப்போ இப்படி வந்து நிக்கிற? ஒன் டேல சேஞ்ச் ஓவரா?’ அவள் விளக்கினாள்.

‘அப்போ நான்தான் தப்பா பாத்துகிட்டு இருந்திருக்கேனா?’ என்றேன். இதற்கு சாதாரணமாக தலையாட்டி ஆம் என்றாள் தனு.

‘நான்தான் அவசரப்பட்டு இருக்கேன். இது என் சைடு ஃபால்ட்டு,’ என்றேன். என் பேச்சில் சுரத்தே இல்லை.

‘இதோ பாரு என் ஆளோட போட்டோ.’ அவளது பர்சைத் திறந்து காட்டினாள். அவர்கள் ஜோடி படம் நன்றாகவே இருந்தது.

‘ஸோ சாரிப்பா. நீ மூணு வருசம் லேட்டு,’ என்றாள்.

இனிமேல் கேட்பதற்கு என்ன இருக்கிறது. இது இங்கேயே முடிவுற்றது. நான் எதிர்பார்த்த எதுவுமே இங்கு இல்லை. நான் காதலியாக நினைத்தவளும் எனக்கு இனி சொந்தமில்லை. காதலைச் சொல்கையில் வெட்கப்படுவாள் என்று நான் எதிர்பார்த்ததும் நடக்கவில்லை. எனக்கான காதலும் இங்கில்லை என்று எண்ணிக் கொண்டேன். இனி தொடர்வதற்கு ஒன்றுமில்லை என்று மனம் விட்டுவிட்டேன். இனி இயல்பாக நடந்து கொள்வதன்றி எனக்கு வேறு வழியும் இல்லை.

‘இது இங்கயே போகட்டும். ஹேப்பி அட்வான்ஸ் மேரீட் லைஃப் மா.’ நான் சொன்னேன். போனால் போகட்டும் என்று சொல்கிறான் என்று அவள் நினைப்பது எனக்கும் தெரிந்தது. தனு முகம் மாறினாள்.

‘டேய் வெண்டக்கா. என்னோட லைஃப விடு. நீ என்ன பதில் சொல்ல போற?’ அவள் கேட்டாள்.

‘என்ன பதில்?’

‘என்ன பதிலா..? என்னடா எதுவும் தெரியாத மாதிரியே கேக்குற?’

‘நீ என்ன கேக்குறன்னு எனக்கு புரியலப்பா?’ உண்மையாகவே எனக்கு புரியவில்லைதான்.

‘புரியலையா?’

‘ஆமா.’ நான் சொன்னது அவளுக்கு சற்று கோபம் ஊட்டிவிட்டதுபோல. என்னையே சில நொடிகள் ஊன்றி பார்த்தாள்.

இதுவரை அவள் சொன்ன காதல் கதையெல்லாம் பொய்யெனச் சொல்லி தன் காதலையும் வெளிப்படுத்த போகிறாளோ என்றுகூட நான் நினைத்து விட்டேன். எல்லாம் ஒரு சின்ன ஆசைதான்.

ஆனால் நடப்பது அதுவல்ல. என்னை ஊன்றி பார்த்தவள் பிறகு சொன்னாள்.

‘இனிமே சொல்லி பிரயோஜனம் இல்லடா,’ என்றாள்.

திரும்பி வாசல் நோக்கி போனாள். அவள் கிளம்புகிறாள் என்று தோன்றியது. நான் நினைத்தது இம்முறையும் தவறு. எதுவும் புரியாமல் நான் குழம்பிப்போய் நின்றேன்.

வாசலிடம் சென்று இன்னொரு கையைப் பற்றிக் கொண்டு திரும்ப வந்து நின்றாள் தனு.

அவளுடன் இன்னொரு பெண். அவளிடம் திகைப்பும் மகிழ்ச்சியும் ஒரு சேர காணப்பட்டது. முகம் தெரிந்தவள்தான். பக்கத்து வகுப்பு. அவளுக்கு தோழிபோல. இங்கே அவள் எதற்கு வந்திருக்கிறாள் என்ற கேள்வி எழுந்தது என்னுள்.

‘இதோ இவ இருக்காளே... சரியானவ. இவதான் உன்ன லவ் பண்ணிட்டு இருக்கா. என்னோட க்ளோஸ் ஃபிரண்டு. பேரு அன்பரசி. பேருக்கேத்த பொண்ணுதாம்பா. ஸ்கூல்ல இருந்தே ஒன்னா படிச்ச எங்கள இங்கதான் கிளாஸ் பிரிச்சிட்டாங்க. ஒருவேளை இவ பக்கத்து கிளாஸ்ல இருந்ததால என்னவோ உனக்கு இவளோட லவ் தெரியாம போச்சுபோல. அதான் நானே இழுத்துட்டு வந்துட்டேன். போடி இதோ உன் ஆசைக் காதலன்.’ அவள் தள்ளிவிட்டாள் கிண்டலாக.

நானும் மலங்க மலங்க முழிப்பது குறித்து அறிந்த தனு சொன்னாள்.

‘அட, அது ஒன்னும் இல்லடா. இவளுக்கு உன்கிட்ட ஏதோ ஒரு சில விசயம் ரொம்ப பிடிச்சிருக்காம். காலேஜ் ஓபனிங்லயே உன்ன பார்த்து ஆசைப்பட்டா. ஆனால் சொல்லாமல் விட்டே ரெண்டு வருஷம் ஓடிப் போச்சு. எனக்கும் இது ஆரம்பத்திலேயே தெரியும். இவளோட லவ் என் மூலமா உனக்கு தெரிய வரும்னு பார்த்தா நீ என்கிட்ட வந்து நிக்கிற. அதான் இப்பவே உன்னோட ஆள கோர்த்து விட்டுடலாம்னு கூட்டிட்டு வந்தேன். அவதான் வெட்கப்பட்டுக்கிட்டு வெளியிலேயே ஒளிஞ்சிகிட்டு இருந்தா. சரி, இவன் கூப்பிடுறானே, இவளோட லவ் மேட்டராதான் இருக்கும்னு நெனைச்சேன். ஆனா நீ என்னடான்னா லவ் பலூன எனக்கு அனுப்புற. இந்தா... உனக்காகவே ஒருத்தி வந்திருக்கா. அவளுக்கு அனுப்பு.’

இவ்வளவு நேரமும் அவள்தான் பேசிக் கொண்டிருந்தாள். எளிமையாக அவளை என்னிடம் அறிமுகப்படுத்தி, அவள் கொண்ட என் மீதான மானசீகக் காதலையும் தெரியப்படுத்தி விட்டாள்.

## 2

யார் இவள்? நான் அப்படி என்ன செய்துவிட்டேன் இவளுக்கு? இப்படித்தான் எனக்குத் தோன்றியது அவளைப் பற்றிய முதல் எண்ணம்.

மற்றபடி பல பெண்களைக் கடந்து செல்வது போன்றுதான் இந்த முகத்தையும் நான் கடந்து சென்று இருக்கிறேன். ஒருமுறைக்கூட நின்று பார்த்ததில்லை. காதலுக்குரிய எந்த அறிகுறியையும் இவளிடமிருந்து நான் கண்டதே இல்லை. பக்கத்து வகுப்பறை என்பதைத் தவிர எனக்கு வேறு எதுவும் தெரியாது. ஆனால் உன்னைக் காதலிக்கிறேன் என்று சொல்லிவிட்டு நிற்கிறாளே.

என்ன பேசுவது என்று அகப்படாமல் நான் வாயடைத்து நிற்கையில் என்னிடம் பேசினாள் அன்பரசி.

‘உங்கள... எப்படி.. எனக்கு.. புடிச்சதுன்னு சட்டுனு சொல்ல முடியல. நான்... நான்... அதாவது...’ அன்பு திக்கி திணறினாள். வெடித்து வெடித்து மறையும் வெட்கம் கலந்த புன்னகை அவளது அழகுக்கு அழகு ஊட்டியது.

இலட்சணம் பொருந்திய முகம். நாவிரலில் நெற்றி. கெட்டியான புருவம். மகிழ்ச்சியை எப்போதும் வெளிப்படுத்தும் கண்கள். சற்றே சாய்வான தலைவகிடு. அம்சமாய் தாழ்வாயில் சிரிக்கையில் விழும் குழிகள். எழில் மிக்க முகக்கூட்டுதான்.

முன்பு தனு என்னிடம் பேசும்போது ஒரு கேள்வி கேட்டாள். உனக்கு உண்மையாகவே யாருன்னு தெரியலையா என்று. என்ன சம்பந்தம் இல்லாத கேள்வி என்று அப்போதே ஒரு கணம் தோன்றியது. சரமாரியாக தொடர்ந்து அவள் பேசியதில் இதை நான் கவனிக்கவில்லை.

நீ என்ன பதில் சொல்லப் போற என்றுகூட கேட்டிருந்தாள் தனு. அவளுக்காகத்தான் கேட்டாள் என்று நினைத்தேன்.

ஆனால் இப்போதுதான் தெரிகிறது, அது அவளுக்கன்று. வெட்கப்பட்டு ஒளிந்து கொண்டிருந்த இவளுக்கு.

அவள் இன்னும் சில வார்த்தைகளைப் பேசினாள். ஆனால் நானும் உறைந்து போயிருந்தேன். என்னை நானே உணர முடியாமல் போனது. சில நொடிகள். என் உடலெங்கும் பருமனானதாக தோன்றியது. இந்த மாதிரி நடக்கும்போது நமக்கு வேற என்ன தோன்றும்.

நான் தேடி வந்தது என் கைக்கு சொந்தமானது அல்ல. ஆனால் இது ஏற்கனவே இரண்டு பேருக்குள் முடிவான காரியம். இடையில் நான்தான் போய் குழப்பி விட்டிருக்கிறேன்.

நல்ல வேளையாக எனக்குள் நான் சொல்லி வைத்துக் கொண்ட ஒரு முற்சார்பு எண்ணம் எனக்கு உதவியது. ஒருவேளை அவள் என் காதலை ஏற்காவிடில் அந்த முடிவை அமைதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று.

ஆனால் இப்போது இங்கு நடந்து கொண்டிருப்பது நான் சற்றும் எதிர்பார்க்காத ஒன்று. நான் காதலித்தவள் இன்னொருவனுக்கு சொந்தம். எனக்கு இனி அவளிடம் எதுவும் இல்லை. ஆனால் என்னை எதிர்பார்த்து ஒருயிர் என்னிடம் வந்திருக்கிறது. இக்கணம் மிக்கனம். அதிர்ச்சிக்கு பின் எதிர்பாராத இன்பஅதிர்ச்சி.

அப்போதுதான் எனக்கு அதைக் காட்டினாள் அன்பரசி. என் பெயர் அவளது உடலில் ஓர் இனிசியலாய் பச்சைக் குத்தப்பட்டிருக்கிறது. அவளது குடும்பத்தில் ஒருவரின் பெயரை இனிஷியல் செய்து கொண்டதாக கூறி சமாளித்திருக்கிறாள். இதனால்தான் எனக்கு தோன்றியது, நான் அப்படி என்ன செய்துவிட்டேன் இவளுக்கு.

வந்தவள் இன்னும்கூட சில விசயங்களைப் பேசிக்கொண்டு இருக்கிறாள். நான் அமைதியாகக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். ஓரசைவுகூட என்னிடம் இல்லை. அவளை முழுமையாக பார்த்து கவனித்துக் கொண்டிருந்தேன். என்னைப் பிடித்திருப்பதற்கு என்னென்ன காரணங்கள் என்பதைக்கூட என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கிறாள் அன்பரசி. அவை ஏற்புடைய காரணங்கள்தான். நான்கூட என்னை இந்த பார்வையில் பார்க்கவில்லை. அவளுடைய கண்ணோட்டத்தில்தான் நான் என்னையே புதிதாக அறிந்துக் கொண்டேன்.

அவளுக்கு என்னைப் பிடித்திருப்பதை நேரடியாக என்னிடம் சொல்ல தைரியம் இல்லையோ என்னவோ. ஆனால் தன் பாங்கியத்தோழியான தனுவிடம் சொல்லி இருக்கிறாள். அதன் பொருட்டுதான் தனு என்னைப் பார்த்திருக்கிறாள். இதில் எனக்கு அவளைப் பிடித்திருந்ததால் அந்த நேரத்தில் திரும்பிப் பார்த்தவளை, என்னைப் பார்ப்பதாகவும் என் மேல் மையல் என்றும் தவறாகப் புரிந்துக் கொண்டேன். அடச்சை...

ஆனால் கண்முன்னே என்னைக் காதலிக்கும் ஒருத்தி. அவளும் ஒரு தேவதைதான். ஏன் தெரியுமா? காதலிக்கும் அனைவருமே தேவதைகள்தான். சரிதானே?

வந்தவள் என்னென்ன பேச நினைத்தாளோ பேசிவிட்டாள். என் சம்மதத்தைக் கேட்டு நிற்கிறாள். நான் எதிர்பார்த்தது இது இல்லை. ஆனால் எதிர்பாராதது தானாய் அமைந்திருக்கிறது. இனி என் முடிவுதான் பாக்கி.

ஆனால் நானோ அவள் பேசி முடித்துவிட்ட பிறகும்கூட அமைதியாக இருந்தேன். நான் அந்த அறையில் இருந்து இயல்பாக வெளியேறினேன். அவளிடம் எதுவும் சொல்லவில்லை. என் அமைதி அவளை கனமாய் அழுத்தி இருக்கும். எது என்னவோ... என்னிடம் வந்தவளுக்கு சொல்ல வார்த்தைகள் இல்லை. என்னிடமிருந்து அங்கே பேசும் பண்பு விலகி நின்று விட்டதோ. அவளுக்கு கொடுப்பதற்கு அந்த அறையில் என்னிடம் ஒரு சொல்கூட இல்லையோ என்று என்னையும் அழுத்தியது இந்த விசயம். அவள் முன்பு நான் நானாய் இல்லை. ஆனால் அவளுக்கு நான் யார் என்று எடுத்துக்காட்டி விட்டாள்.

காதல் கடலின் ஒரு துளிகூட முழு கடலின் அன்பைக் கொட்டிக் கொடுக்கும்போல. ஆம்.

இந்தக் காதல் அழுத்தம் வயதின் இயல்பு. வாழ்வின் இயல்பு. இதை அமைதியாகவே ஏற்கலாம். கொண்டாடலாம். தாறுமாறாக்கி துயரம் துய்ப்பானேன். இதுவெல்லாம் என்னுள் எளிமையாய் தோன்றி மறைகின்றன. எந்த பதிலுமே சொல்லாமல் வந்துவிட்ட எனக்கே மனம் காதல் அழுத்தம் கொள்கிறது எனில் வந்தவளுக்கு இது இரட்டிப்பாகத்தானே இருக்கும். ஒருவேளை நான் ஏற்கவில்லை என்று முடிவு கட்டி இருப்பாளோ. நாளை மீண்டும் பார்த்தால் நான் முன்பு போலவே தெரிவேனா? இல்லை, காதலை உதறியவனாவேனா?

நான் அவள் காதலை ஏற்பதில் என்ன சிரமம் என்றுகூட எனக்குள் எண்ணங்கள் ஊறின.

எதுவெல்லாம் அவள் காதலிக்க அவருடைய காரணங்களோ, அதுவெல்லாம் என் இயல்பாக இருக்குமானால், அதுவெல்லாம் அவளது வாழ்வுக்கும் உதவும் இல்லையா. மனஅமைதி அவளுக்குள் இருக்கும்தானே. காதல் தேவதையாகவே வாழலாமே.

காதல் காதல் காதல்

காதல் போயின்

சாதல் சாதல் சாதல்.

அந்த முண்டாசு கவிஞன் இதை சும்மா சொல்லி இருக்கமாட்டான். அனுபவித்துச் சாறு குடித்திருப்பான். அதன் சுவையைத்தான் இங்கே இப்படி சொன்னானோ

என்னவோ. அவன் பார்வையில் காதலிப்பவரன்றி மீதி அனைவருமே வாழ்ந்தும் இறந்தவர் போலும்.

இவளுக்கு இப்போது நான் என்ன சொல்லப் போகிறேன். காதலிக்க தேவையான அனைத்து காரண காரியங்களும் வாழ்வியல் பொருத்தங்களும் அவளால் இப்போது அமைந்திருக்கிறது. என்னுடைய பதில் என்ன? நான் என்ன சொல்வேன்? ஏற்கிறேனா இல்லையா? அன்பரசியின் காதல் வெல்லுமா?

இந்த காதல் அழுத்தம் என்னை ரொம்பவே அழுத்திவிட்டது. அதனால் நான் அந்த ஒரு வலியைத் தாங்கிக் கொண்டேன்.

3

மறுநாள் நான் கல்லூரிக்குச் சென்றேன். வழக்கமான அலுவல் பணிகள் எல்லாம் முடிந்து ஆசிரியர்களின் விடுப்பு ஏற்பட்டது. மாணவர்கள் நாங்களும் நடன பயிற்சிக்காக எங்கள் வகுப்பறையினின்று வெளியேறி பயிற்சி செய்யும் இடம் நோக்கி விரைந்தோம். பயிற்சி எடுத்தோம்.

நான் காதலித்தவள் அவளது பார்வையை ஒரு கேள்விக்குறியாக என் மீது எறிந்த வண்ணம் இருந்தாள். வகுப்பறையிலிருந்து பயிற்சியறை வரையிலுமே. நான் என்ன சொல்ல போகிறேன் என்பது ஒருபுறம் இருந்தாலும் நான் நேற்று எதையுமே சொல்லாமல் வெளியேறியது ஏனோ என்ற கேள்விதான் அவள் பார்வைக்கு காரணம். அவளது பார்வையே இப்படி என்றால் நேற்று எனக்காக வந்தவளுக்கு எப்படி எல்லாம் இருந்திருக்குமோ.

பயிற்சியில் என்னுடன்தான் இருந்தாள் தனு. அன்பரசி எந்த அறையில் இருக்கிறாளோ தெரியவில்லை. நான் இயல்பாகத்தான் இருந்தேன் நேற்றைய நிகழ்வுகளின் பாதிப்புகள் எதுவும் என் முகத்தில் தெரியவில்லை. கேள்வியோடு பார்க்கும்போது அவளது பார்வையை நான் வாங்காமல் இல்லை. என்னை இயல்பாய் பார்க்கும் இவளுக்கு என்ன தோன்றியதோ நேராக என்னிடமே வந்து பேசினாள்.

‘டேய், ரொம்ப சிம்பாதடா. நீ எதுவுமே சொல்லாம போயிட்ட. நாங்க ஏதோ தப்பு பண்ணிட்டோம் அப்படின்ற மாதிரி கில்ட்டாவுது. உன்னோட முடிவு என்னன்னு சொன்னாதானே எனக்கும் தெரியல. ஏத்துக்கிறியோ இல்லையோ... சொன்னா தானே. ராத்திரியில சரியா தூக்கமே இல்ல. இதுல அவ என்ன சின்னம்பட்டாலோ தெரியல. பாவம்டா மனசுல என்ன இருக்குன்னு ஒரு வார்த்த சொல்லிடேன்.’

அவள் சொன்னது உண்மைதான். எனக்கும் இதே நிலைதான் எனவே நான் நேற்று சந்தித்த அறைக்கு மீண்டும் வர சொன்னேன்.

அதே அறை, அதே சூழ்நிலை, நாங்கள் மூவரும் இருந்தோம். என்னுடைய ஒரு சொல்லுக்காக என்னைக் காதலிப்பவளும் நான் காதலித்தவளும் என்னை எதிர்பார்த்து நிற்கின்றனர். என்ன சொல்ல போகிறேன்?

அட, நான் என்ன சொல்ல போகின்றேன். வேண்டும், வேண்டாம் என்று இரண்டு சொற்களில் எதை நான் சொல்கிறேனோ அதன்படி என் வாழ்வு எதிர்கொண்டு நகரப் போகின்றது. அப்படிப்பட்ட ஒரு முக்கியமான இடத்தில்தான் நான் நிற்கிறேன். ஆனால், இது என்ன பிரமாதம், இன்னும் ஸ்பெஷல் ஐட்டம் ஒன்னு இருக்கு என்று வடிவேலு சொல்வது போல்தான் இந்த சூழ்நிலை.

கொஞ்சம் சிரமப்பட்டு விட்டாள் அன்பரசி. நான் அவளிடம் எதுவும் சொல்லாமல் நேற்று சென்றுவிட்டதுதான் காரணம். என்னுள் நேற்று ஏற்பட்ட மாற்றங்கள் என் சொல்லுக்குள் விளக்க முடியாதவை. என்னால் தாங்க முடியாத சூழ்நிலை. என்ன செய்வது என்று சற்று தெரியாத நிலையில் பேசாமல் நான் வெளியேறி விட்டேன்.

ஆனால் இன்று நான் என்ன சொல்ல போகின்றேன் என்று அறிய நிற்கின்றனர் இரண்டு தேவதையர். ஒருத்தி என்னை. இன்னொருத்தி இன்னொருவனை. அன்பரசியைக் பார்க்க வேண்டுமே. மகிழ்ச்சி இயல்பாகக் கொப்பளிக்கும் குறுகுறுப்பான பார்வையோடு அந்த கண்கள் என்னிடம் எவ்வளவு எதிர்பார்த்து நிற்கின்றன.

என்னிடம் இவ்வளவு காதலை வெளிப்படுத்த அவள் எடுத்துக் கொண்ட காலமும் நான் என் காதலை வெளிப்படுத்த எடுத்துக் கொண்ட காலமும் சமமானவைதான். நான் எதிர்பார்த்தது எனக்கு கிடைக்கவில்லை. அது பிறனொருவனின் சொந்தம். ஆனால் என்னைத் தேடி எதிர்பார்ப்புடன் ஒரு தேவதை நிற்கிறாள். நான் அனுபவித்த எல்லாமே அவளும் அனுபவித்திருக்கின்றவள். அவளிடம் போய் வேண்டாம் என்று என்னால் சொல்ல முடியுமா?

ஒன்றை எதிர்பார்த்துக் கொண்டு ஒரு பாதையில் சில சிரமங்களுக்கு மத்தியில் செல்கிறோம். கடைசியில் நாம் எதிர்பார்த்தது இல்லை. ஆனால் வேறொன்று கிடைத்தால்? அதுவும் நாம் வாழ்வதற்கு வகை செய்யக்கூடியதாக இருந்தால்? அது எப்படி இருக்கும்? அந்த நொடிதான் இது.!

நான் எளிமையாக என் சட்டைப் பட்டனைக் கழட்டினேன். என்னிடம் நான் தாங்கிய அந்த ஒரு வலியின் அடையாளமாக பச்சைக் குத்தப்பட்ட அவளது பெயரின் முதல் எழுத்தை அவளுக்கு காட்டினேன்.

என் மார்பில் இதயத்துக்கு நேராக இருந்த எழுத்தைத் தொட்டு தடவினாள் அன்பரசி. நான் தாங்கிய வலி இங்கே லேசாய் மாறிப்போனது. மகிழ்ச்சி நிறைந்த கண்களில் குறும்புடன் பொங்கியது அந்த காதல் வெள்ளம்.

வட்டக்கச்சி வினோத்

# ஏன் ஈழத் தமிழன் அழுகிறான்



அவனுக்கு இங்கே அழுவதற்கு கூட
வாய்ப்பு மறுக்கப்பட்டது,

தன் பிள்ளை காணாமல் போனான்
பக்கத்தில் இராணுவம்,
தன் பிள்ளை வீரமரணம் அடைந்தான் பக்கத்தில்
இராணுவ முகாம்,
அப்பா வெளிநாட்டில் இறந்துபோனார்
கண்ணீரை மட்டும் கண்களில் சொரிந்தபடி கடித
உறையை நனைத்திருக்கிறான்,

பங்கறுக்குள் புதைத்து வந்த உறவுகளை நினைத்து
முகாமுக்குள் முனங்கியிருக்கிறான்,

போர் தின்ற மீதியாக
அகதியாகி
வீசா தேடி தெருக்களில் உறங்கியிருக்கிறான்,

தொப்புள் கொடி தேசத்தில்
இன்னும் முகாம்களில்
தம் கண்ணீரை முகங்களில் ஏந்தியிருக்கிறான்,

தேயிலைத் தோட்டத்து அடிமையாக
இரத்தம் சிந்தியிருக்கிறான்,
வெய்யில் பாலை வனத்தை அகதியாக
வெறுங்ககாலுடன் கடந்திருக்கிறான்,
உறை பணியில் தன் உணர்வுகளை உறைய
வைத்திருக்கிறான்,

போர்தின்னும் விதவைப் பெண்கள் வாழ்வின்
வலிகளை அறிந்திருக்கிறான்,
புதைகுழிகள் தோண்டப்படும் போது
சோகத்தை தனக்குள் புதைத்திருக்கிறான்,

அவன் ஓவென்று ஆழ ஒரு மேடை கிடைக்கிறது
அரை நூற்றாண்டு கழித்து,
அது கழிவிரக்கமோ!, அவன் கவலை இறக்கமோ!
அவன் அழும் உரிமையையாவது
அனுபவிக்கட்டும்
எம் சார்பாக

பாடையில் போவதற்கிடையிலாவது
பாரம் குறைய பாடி அழட்டும்.

கோபால்தாசன், சென்னை

# சிசு

இருவுடல்கள்
பின்னிக்கொண்டு
விடும் பிழிவினில்
உயிர்த்துளியொன்று
கருவாகி


எவ்வுயிராயினும்
பெண்ணுக்கே
கர்ப்பப்பையும்
சுமக்கும் காலமுமென்பது
நியதியாக

வளைகாப்பு
பாரம்பரிய
சம்பிரதாய சடங்குகள்
மேள தாளங்களென
விமரிசையாகும் நிகழ்வுகள்

இஃதெல்லாம்
நாளை வரப்போகும்
ஒரு புதிய வரவிற்கான
முன்னோட்டங்கள்

ஒரு
குடும்பத்தை
ஒரு தலைமுறையை
நிமிர வைக்கும் ஆஸ்தி அது

பெண்ணின்
ஒவ்வொரு நாளும்
தமக்கெனவும் கருவுக்கெனவும்
கடத்தப்படுகிறது



தாயின்
வயிறு அல்லது பிறப்புறுப்பினைக்
கீறிக்கொண்டு வெளிவரும்
மனிதம்

உதிரம் தோய்ந்தபடி
வீரென குரலெடுத்து
தலைகீழ் தொங்கியபடி பூமியைக்
காணும் அதிசயம்

எங்கே
சிவன் இயேசு அல்லா
எல்லாம் இயற்கைக்கு அப்பால்

பகீரத
பெரும்பாடுகள்
நேர்த்திக் கடன்கள்
முகமற்ற விரதங்கள்
உயிரற்ற கிலிகளென
கொண்ட இப்பிறப்பு

ஆசைக்கென்று
கனவுக்கென்று
வாழ்வின் பக்கங்களில்
ரசித்து ரசித்து எழுதி வந்த
தாயின் மறு பதிப்பிது

பொக்கை வாயும்
பிஞ்சு கை கால்களும்
பிசிறு தலை மயிருமாய்
பறித்துப் போட்ட
ஒரு தாமரைப் பூவென
உறக்கம்

இதுவரை இருந்த
துன்பமும் கஷ்டமும்
துயரமும் கவலையையும்
முலையருந்தும் சேயின் சுகம்
போக்கும்

வெறும்
கணவன் மனைவியென
வாழ்ந்தவர்க்கு
தந்தை தாயெனும்
அங்கீகாரம்

இறப்பையோ
அல்லது
தற்கொலையையோ
எண்ணும் மனிதரையும்
மாற்றும் முகம்

கொலைகாரனோ
கொள்ளைக்காரனோ
கல்லையும் கரைக்கும் வசீகரம்

யாரோ இருவர் முகவெட்டை
தந்தையெனவும்
தாயெனவும் இல்லை இல்லை
தாத்தா பாட்டியென சம்பாஷணையில்

எனினும்;
ஒவ்வொரு
வயதிலும் எழும் அறிவின்
வளர்ச்சியினில்தாம் சில
பெற்றோர்க்கு சமமாய்
வெளி பிரசவ வலியென்பது
ஆரம்பமாகிறது ஆயுள்வரைக்கும்

சிறுகதை

# தடம்

முல்லைக்கமல்



அம்மன் கோவில் வீதியின் கும்பிமணல் செறிவில் கால்களை எடுத்தெடுத்து வைத்து அவை புதையப்புதைய நடக்கிறபோது வலி வெறும் பாதங்களுகளூடகத் தொற்றி உச்சந்தலைக்கூட வலிக்கச்செய்தது.ஆனால் ஒரு பெருமழையின் பின்னால் ஊரின் குடிமனைகளுக்குள்ளால் அடித்துப்பிடித்துக்கொண்டு வருகிற வெள்ளம் அந்த வீதியைக்கடந்தும் வீதியாலும் பாய்ந்து அம்மன் கோவிலின் எதிர்ப்பக்கத்து பள்ளக்கானிக்குள் வந்து சேர்ந்துவிடுகிறது. இதுவும் ''செம்புலப்பெயர்நீர்''தானே என்று யாரிடமும் அபிப்பிராயம் நான் கேட்கவில்லை!.

அம்மா ஏன் இந்த மாலை நேரத்தில் என்னை சீக்கரமாக வீட்டுக்கு வரச்சொல்லியிருப்பா?என்ற கேள்வியும் விளையாட்டை இடையில் முறித்துக்கொண்டுவந்த சலிப்பும் கூடவே தொற்றிக்கொண்டிருந்தது.பாடசாலைக்கு போய்வந்துவிட்டு இன்றைக்கு எந்தவிதமான பின்நேர வகுப்புக்கும் போகாத ஒரு பிள்ளைக்கு வீட்டில் எந்த விதமான மதிப்பிருக்குமோ அதற்காக என்றுமே வருந்தியதில்லை. அடிவாங்கி மரத்துப்போய் பேச்சுவாங்கி சுறணை கெட்டுப்போய் கிடக்கிற மனத்துக்கு உடனடியாக வீட்டுக்கு வரச்சொல்லியிருந்தது எந்தவித பயத்தையோ,எச்சரிக்கையோ தரவில்லை!.வழமைபோல ஏதாவதொரு எடுபிடி வேலையோ,அல்லது அம்மாவின் போதனைகளுக்கு காது செவிடாகிவிட்டிருந்தது.வீட்டுக்கு முன்னால் கிளைகள் தாழ்ந்து நிற்கிற மாமரம் கூட எனக்கு ஓர் போதிமரமாக இருந்ததில்லை.ஆனால் தங்கச்சிக்கு மட்டும் எப்படி இவை சாத்தியமாயிற்று!பாடசாலையில் எதற்கும் முன்வராத அவள் எல்லாப்போட்டிகளிலும் வெற்றைகளிலும் தோல்விகளிலும் பெயர் சொல்லுகிற என்னைவிடவும் இப்போது முன்னுக்கு வர முடிந்தது?.

இன்று என்ன புதினத்தை அவள் வைத்துக்கொண்டு காத்திருக்கிறாளோ என்ற என்ற அவளின் பிரசன்னத்தை யூகித்துக்கொண்டே வீடுநோக்கிப்போனபோது தெருவின் ஓரமாக எமது வளவுக்கு அண்மையாக ஓர் பார ஊர்தி கரைதட்டி நிறுத்தப்பட்டிருந்தது.அதன் பிரமாண்டத்தை ரசித்துக்கொண்டே நடந்து அதைக்கடந்து போனபோது ஓர் பசுமாடு திடுக்குற்று வேலிக்கிளுவையை ஒடிப்பதை நிறுத்தி ஓடலாமா விடலாமா எனப்பார்த்து.அதன் மீதான என் பார்வைக்கு வெகு சீக்கரத்திலேயே தப்பிவிட்டதால் அதன் மிரட்சி குறைந்து மீண்டும் வேலியிலுள்ள இழம் கிளுவங்குருத்துகளை ஒடித்துத்தின்ன கிளம்பிவிட்டது.

நான் எங்கள் வளவின் படலையைத்திறந்துகொண்டு உள்ளே போனபோது மாலுக்குள்ளே(தலைவாசல்)வலப்புறத்திண்ணை மீது ஓர் மனிதன் இருந்துக்கொண்டிருந்தார்.அவருக்கு முன்னால் குடித்து மிகுதிவைக்கப்பட்ட ஓர் வெள்ளி ரம்லர் இருந்தது.அதன்மீது பின்னேர சூரிய ஒளிபட்டு மின்னியது. அம்மனிதனின் கண்களில் தெரிகிற ஒளியும் மிரட்சியும் ஒருவிதமான வாஞ்சையுமாக அவர் இருந்தார்.நான் ஓர் வளர்ப்பு நாயின் மௌனத்துடன் அம்மாவுக்குப்பக்கமாக போனேன்.அம்மனிதனின் முகத்தில் இம்போது மிரட்சி மறைந்து ஓர் புன்முறுவலுடன் ஓர் நகைச்சுவையான ஏளனம் தொற்றிக்கொண்டது.

நான் ''அம்மா''என்று அம்மாவை அழைத்தேன். அந்த அழைப்பு எனக்கே சரிவரக்கேட்கவில்லை.அப்பா என்னைப்பார்த்து சிரித்தார்.நான் ஒடுங்கிக்கிடப்பவனைப்போல ஆகிவிட்டிருந்தேன்.அப்புதிய மனிதனின் வருகையை முன்னிட்டு அப்போதுதான் அம்மா பேசத்தொடங்கினாள்.

''தம்பி இவர் யாரென்று தெரியுமோ?''

''தெரியேல்ல அம்மா''என்றேன் நான்.அம்மா ஓர் விடுகதைக்குரிய பாவத்துடன்னிருந்தாள்.

''கொஞ்சமும் ஞாபகங்கெட்டவன்''என்றாள் அவள்.

அம்மாவிடம் பின்னேரம் விளையாடப்போகும் போது சொல்லாமல் சென்றதற்கு சேர்த்து இப்போது பழிவாங்குகிறாள் போலும்.

''அருணாசலத்தை தெரியுமோ?''என்றாள் அம்மா.

''யாரின்ரை அருணாசலம்?''

அம்மாவின் புன்னகையின் பின்னால் தெரிகிற புதிரின் விடைக்கு நான் காத்திருக்கத்தொடங்கினேன்.

அருணாசலம் இப்போதுதான் கதைக்கத்தொடங்கினார்.

''தங்கச்சி எப்போது வருவாள்''?.என்று என்னை நோக்கி கேட்டார்.நான் வீட்டின் உட்புறமாய் பார்த்துவிட்டு அம்மாவின் முகத்தைப்பார்தபோது அருணாசலம் என்பக்கம் திரும்பியவாறு என்னிடம் கேட்டார்.

''பார்வதியம்மாவை ஞாபகமிருக்கிறதா உங்களுக்கு''

எனது கலங்கித்தெரிகிற ஞாபகவெளியில் அதிகாலைப்பொழுதின் பனிக்குளிரின் புகார்க்கூட்டத்தின் பின்னால் நின்று தெரிகிற உருவங்கள் போல யார்யாரோ வந்தார்கள்.கூச்சமாக அக்கணத்தில் திடீரென்று நான் கேட்டேன்.

''சூரியகாந்தனின் அம்மாதானே''

''ஓம் காந்தன்ர அண்ணாதான் நான்.''

எனக்கு இப்போது உங்களை ஞாபகம் வருகிறது. நாங்கள் அப்போது ஊரின் காடுகளின் அருகில் இருந்தோம்.

அன்றைய பின்னேரத்தின் பொழுதில் வெயில் குறைந்துவிட்டிருந்தது.காடுகளில் மரங்களில் அறையும் காற்று குளிர்ச்சியை குழைத்து மேனியில் தடவிற்று.

கோயில் மணியின் மாலைநேர பூசை ஆரம்ப ஓசைக்குக்கூட யாரும் விளையாட்டை நிறுத்தவில்லை.வீடுகளுக்கு திரும்பிவிடவேண்டுமென்ற உணர்வற்று விளையாட்டில் இருந்தார்கள்.யோகாம்பரமண்ணையாட்களுடன் எனது அண்ணனும் சேர்ந்து பந்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். பத்துக்கு மேற்பட்ட சிறுவர்களால் அந்த கோவில் முன்றல் குதூகலித்திருந்தது.

முதலில் நாங்கள் கோவிலின் இடதுபுறத்தில் இருந்த சப்பறக்கொட்டகையிலே ஒழித்துப்பிடித்து விளையாடினோம். அதில் கோவிலம்மாவின் மகள் நிசாம்மா அடிக்கடி தோற்றுப்போனாள்.காரணம் அவள் வெளிமண்டபத்தின் வலதுபுறத்தில் கீறிவைத்திருந்த முருகப்பெருமானின் பேரெழிலுடனும் வெண்மை நிறத்துடனும் இருந்தாள். அவளால் தனது பட்டுப்பாவாடையையோ அல்லது அவளது வெளிர்நிறக்கால்களையோ மறைத்து வைக்க முடியவில்லை!. எனது கண்களுக்கு அவள் எப்போதும் தெரிந்தாள்.அவளால்தான் அவளது அணி தோல்வியடைந்து கொண்டிருந்தபோது அவளின் நண்பியான என்தங்கைக்கு ஓர் சிந்தனை தோண்றிற்று "நாங்கள் ஒழித்துப்பிடித்துவிளையாடுவதை நிறுத்திவிட்டு குடோர் விளையாட்டு விளையாடுவோம் என்றாள்.அந்த விளையாட்டும் என்போன்ற கறுப்பர்களுக்கு பிடித்திருந்தது.எங்கள் எண்ணையும் வியர்வையும் பிறக்கு மேனியின் வழுவழுப்பை எந்தவொரு கொம்பனாலும் பிடித்துவிடமுடியாது!.

குடோர் விளையாட்டு என்பது ஒரு வட்டத்தில் நிற்கும் ஓர் அணியை வட்டத்துக்குள் வந்து தொட்டுவிட்டு வெளியில் ஒருவரிடமும் அகப்படாமல் ஓடிவிடவேண்டும்.

ஒருமுறை நாங்கள் உள்ளே இருந்தோம்.பலமுறை வெளியே இருந்தோம்.வெற்றி எங்கள் பக்கமாக வந்துபோது பொழுது இருண்டுவிட்டது.

பெரியவர்களான யோகாம்பரமாட்கள் விளையாட்டை முடிவுறுத்தாமல் தொடர்ந்துகொண்டிருந்தார்கள். சின்னஞ்சிறுவர்களான நாங்கள் அவர்களது விளையாட்டை வேடிக்கைபார்த்துக்கொண்டும் பந்தை எடுத்துக்கொடுத்துக் கொண்டிருந்தபோது விளையாட்டில் களைத்துப்போனவர்கள் கோயிலின் கட்டடவேலைக்காக பறித்து குவிக்கப்பட்ட கும்பிமணல்மேட்டில் வந்திருந்து களைப்பாறினர். மீதமுள்ளவர்கள் உதைபந்தாட்டமாடினர்.

இரவுப்பூசைக்கு ஐயர் ஆயித்தமாகிவிட கோயிலடியில் எங்களுக்குப்பக்கத்தில் களைப்பாறியவர்கள் எழுந்துபோய் பந்து விளையாடினார்கள்.நாங்கள் கிரவல்ப்பாதையால் வீட்டுக்கு வந்தபோது ஓர் உழவு இய்திரம் எம்மைக்கடந்து ஒட்டுசுட்டான் தார்வீதியால்ப்போயிற்று.அதன் இரைச்சல் காட்டில் வெகுதூரம்வரைக்கும் இரைந்து இரைந்து குறைந்து போயிற்று.ஆனாலும் உற்றுக்கவனித்தால் காட்டுப்பாதையாகையால் ஏதோர் காட்டுப்பறவை ஓசையும் கூடவே சில்வண்டின் ஓசையும் சேர்ந்து களைத்துப்போன எனது தலைக்குள் மூளைக்குழவி பறந்துகொண்டு தலையை றீங்காரித்தது.

"கொண்ணன் உங்களோடு சேர்ந்து வீட்டுக்கு வரவில்லையோ?" என்றாள் அம்மா.

அண்ணனின் பிரசண்னம் இல்லாத எங்களது வருகையால் அம்மா என்னிடம் அவ்வாறு கேட்டாள்.

"அம்மா அண்ணா எங்களோடு வரவில்லை அவர்களின் விளையாட்டு முடியவில்லை" என்று நான் கூறியதும் என்தங்கை என்னை நிமிர்ந்து பார்த்தாள்.நான் அண்ணன் குறித்து கோள்மூட்டிவிடுவதாக அவளுக்குப்பட்டிருக்கலாம்!.

"நீங்கள் இரண்டுபேரும் போய் கால்முகம் கழுவிப்போட்டு சாமி கும்பிடுங்கோ"

"ஓம்ம்மா"

"சின்னக்குடத்திற்குப்பக்கத்தில ஒரு சின்னக்கிண்ணம் இருக்கு அதில தண்ணீரை வார்த்துக்கழுவுங்கோ" என்றாள் அம்மா.

தண்ணீர் அள்ளிவர கோயிலடிக்கிணற்றுக்குத்தான் போகவேண்டும்.இடைநாரியில் ஏற்றிய குடத்தோடு கையிலொர சிறிய குடத்தோடு போனாலும் அவசரத்தைக்கு கிணற்று வாளி கிடைக்காது.ஒரேயொரு கயிற்றுவாளி. ஆழக்கிணறு,சுற்றுவட்டாரச்சனங்களும் கிணற்றடியை நிறத்துக்கொண்டிருக்கும்.

சாமிபடத்துக்கு முன்னால் நான் தேவாரம் பாடிக்கொண்டுருந்த போது அண்ணன் வந்தான்.தங்கை முகம் துடைக்க அம்மாவிடம் சென்றுவிட்டாள்.

"தம்பி இஞ்சேயொருக்கால் வந்திட்டுப்போ" என்றாள் அம்மா.

அந்த அழைப்பு எனக்கானது என்று எனக்கு தோன்றவும் நான் அம்மாவிடம் போனேன்.

"தங்கச்சீன்ர தோடுகள் இரண்டையும் காதில காணேல்ல நீங்கள் எங்கதம்பி இஞ்சேயொருக்கால் வந்திட்டுப்போப்பா.." என்றாள் அம்மா. அந்த அழைப்பு எனக்கானது என்று எனக்குத்தோன்றவும் நான் அம்மாவிடம் போனேன்.

"தங்கச்சீன்ர தோடுகள் ரெண்டையும் அவள்ள காதில காணேல்ல நீங்க எங்க விளையாடினீங்கள்"

"நாங்களோம்மா! நாங்கள் முதல்ல சப்பறக்கொட்டகைக் குள்ளேயும்,பிறகு கோயில் மடப்பள்ளிக்கு வெளியாயிலுள்ள மணற்கும்பிக்கு பக்கத்திலும்தானம்மா" என்றேன் நான்.

"தோடுகள் தொலையேல்ல யாரோ பிள்ளையின்ரை

காதுகளிலிருந்த தோடுகளை கழற்றியெடுத்திட்டினம்,நீ சொல்லம்மா யார் உன்ரை காதைத்தொட்டது?"

அவள் ஒரு கிளிக்குஞ்சின் மிரட்சியோடு விழிகளை பெரிதாக்கியும் சிறிதாக்கியும் தனது தலையை சரித்தும் யோசிப்பதாக பாவனை காட்டினாள்.அவளொரு ஐந்து வயதுச்சிறுமி. அம்மா அவளை விடுத்து என்னிடம் திரும்பினாள். நான் எங்களோடு கூட விளையாடிய எல்லோரையும் சொன்னேன். அம்மாவுக்கு எனது பதிலில் திருப்தியில்லாமல் போகவும் அண்ணாவின் பக்கம் திரும்பினாள். அவன்"நானம்மா உவங்கட பக்கம் போகேவேயில்லையம்மா"என்றான். அம்மா அவனை எரித்துவிடுவதுபோலப்பார்தாள். எனது வயிற்றின் அடிப்பாகம் கூசீற்று.சிறுநீர் கழிக்கவேண்டும்போலத்தோண்றிற்று.

அம்மா தங்கச்சிடமே மீண்டும் கேட்டாள்.

"நீயே சொல்லம்மா உனக்கு கிட்ட யார் வந்திருந்தவர்கள்"என்றபடி அவளின் தலையைக்கோதினாள். அவளுடைய மூளையில் ஏதோ பொறிதட்டிற்று.

"அருணாசலமண்ணைதான் உங்களைப்போல என்ரை தலையைத்தடவினவர்."

அம்மா அவளின் கையை இறுகப்பிடித்துக்கொண்டு எங்கள் வீட்டுக்கு தெற்குப்பக்கமாயுள்ள வீட்டிற்குப்போனாள். தங்கை ஒருபொழுது கீழே விழப்போனாள் அவளின் வலதுகையை மேல்நோக்கி தூக்கிவிட்டு ஓட்டமும் நடையுமாக போனாள் அம்மா.பின்னால் நானும் அண்ணாவும் கூடவே போனோம்.அம்மா அண்ணாவை மீண்டும் எரிப்பதுபோல பார்த்து விட்டு வீட்டுக்கு திரும்பிப்போகச்சொல்லி கையைக்காட்டினாள்.அவன் செய்வதறியாது நின்றுவிட்டான்.நான் சிறிது தூரம்விட்டு அவர்களோடு போனேன்.

"நீங்களே பாருங்கள் காந்தன்ரை அப்பா,என்ரை பிள்ளையின்ரை காதுகளை.."

மனிதன் திகைப்பின் உச்சத்துக்கே போயிருக்கவேண்டும். விழிகள் விரிய..

"என்னம்மா சொல்லுறீங்கள் பிள்ளை.."என்றார். அவருடயை பிழைபட்ட தமிழ் உச்சரிப்புடன்.

அம்மா தங்கச்சியையே நடந்த கதையைச் சொல்லச் சொன்னாள். அந்த மனிதன் கள்ளுக்கடையில் வைத்து விற்கப்போன மீன் பொரியலும்,சுண்டல்,கடலைவடைகளு டனான பைகளை வீட்டின் கப்புகளின் கொழுகொழும்பில் கொழுவிவிட்டு..

"பார்வதீ.."என்று இரைந்தார்.வீட்டுக்குளிருந்து வெளியே வந்த பார்வதியம்மாவிடம் கைகளிலிருந்த இதர சாமான்களை கொடுத்துவிட்டு கோயிலடிப்பக்கமாக போய் சிறிது நேரத்தில் மகனோடு திரும்பி வந்தார்.கண்கள் இரத்தநிறம் கண்டிருந்தது.அவரது ஆஜானுபகவானான தோற்றத்தில் அவரது தோழில் தொங்கிய பெருத்த கைகளுக்குள் நெரிபட்டு வீதியோரம் இழுத்து வரப்பட்ட அவருட மூத்த மகன் இருந்தான்.

"அந்தத்தோடுகளை அந்தக்குழந்தையிடமே கொடு"

அருணாசலம் அதை தங்கையிடமே கொடுத்துநிமிர்ந்தபோது அவனது பின்புறத்தில் கால் இறங்கியது.ஓவெண்று அருணாசலம் அலறினான்.ஓடிச்சென்று குறுக்கே விழுந்தாள் அம்மா.

"தங்கச்சி இது என்ரைபுள்ளை,நான்தான் திருத்தவேணும் தயவுசெய்து அங்கால போயிடுங்கோ பிள்ளை"என்றார் மனிதர்.

அம்மாவைத்பின்னுக்கு இழுத்துவிட்டு ஊடே புகுந்தாள் "பார்வதியம்மா".நானும்கூட அவர்கள் எங்கள் ஊருக்கு வந்து எமது அயலில் குடிவந்தபோதிலிருந்து அயலவர்கள் அனைவரும்போல அப்படித்தான் அவரை அழைத்தோம்.

பார்வதியம்மாள் குறுக்கே புகுந்து மன்றாடியபோது"ஏடி தேவடியாச்சிறுக்கி உன்ரை பிள்ளையை மட்டும் கவனிச்சிட்டு வளர்திட்டு என்ரை பிள்ளையை கள்ளளனாக்கிட்டியே!,நீ எனக்கு கிட்டவந்தால் கொலதான் விழும்" அதற்கு மேல் பார்வதியம்மாள் மேற்கொண்டு ஒரு காலடிதானும் முன்னுக்கு வைக்கவில்லை.ஓர் பெண்யானையின் அசைவைப்போல பின்வாங்கிவிட்டாள்.

எனக்கு எங்கோ ஏதோவொன்று இடித்தது...!.

திடீரென்று வீட்டுக்குள் புகுந்து வெளியே

வந்த அருணாசலத்தின் தந்தை அருணாசலத்தின் குண்டிப்பகுதில் இரும்புக்கம்பியால் சூடுவைத்தபோது நாங்களும் சூடுவைக்கப்பட்வர்கள்போல கதறத் தொடங்கினோம்..

வெளிப்படலையைத் திறந்துகொண்டு தனது துவிச்சக்கர வண்டியைத்தள்ளிக்கொண்டு தங்கை உள்ளே வந்தாள்.ஓர் அனுமானிப்பில் அருணாசலம் என்கிற அந்த புதிய மனிதன் அவளைப்பார்த்து சினேகித்த்துடன் சிரித்தார்.

அவள் உடல் கூச்சம்கண்டவளைப்போல் பாவனையாயிற்று.குனிந்த தலையும் வெட்கமுமாக அவள் வரவாயிற்று.ஓடிச்சென்று முடிவிடத்தைத்தொடும் ஓர் ஓட்ட வீராங்கனையின் பதட்டம் அவளில் தெரிந்தது.

"யாரம்மா?"என்றுதயங்கிய தனது பதினெட்டு வயது மகளை அம்மா இறுக அணைத்துக்கொண்டாள்.

"அருணாசலமண்ணையை தெரியுமோ"

அவள் இப்போதும் ஒரு கிளிக்குஞ்சைப்போல கண்களைச் சிறிதாக்கியும் பெரிதாக்கியும் தலையைச் சரித்தும் யோசித்து கண்டுபிடித்துவிடுவது போல பாவித்தாள்.அம்மா அவளது தலையைக்கோதிக்கொண்டிருக்கும்போது

“உங்களுக்குஞாபகமிருக்கிறதாதங்கச்சி,நீங்கள் சின்னப்பிள்ளையாயிருக்கும்போது உங்கட தோடுகளை திருடியவனை.”

“எனக்கு ஞாபகமில்லையண்ணை..”என்றாள் அவள்.

“எனக்கு உங்களை ஞாபகமிருக்கு,உங்களை ஒருமுறையெண்டாலும் வந்து பார்க்க வேணுமெண்டு நெடுகலும் நினைக்கிறனான் தங்கச்சி.என்னை நீங்கள் மன்னிச்சிடுங்கோ” என்றார் அருணாசலம்.

“இதென்ன பெரிய கதையேதோ சொல்லுறீங்களண்ணை எனக்கொண்டும் விழங்கேல்லை...”என்றாள் தங்கச்சி.அம்மாவும் சேர்ந்துகொண்டாள்.

“சரியம்மா அந்த ஒரு சம்பவத்தாலதான் நான் இன்டைக்கு ஒரு முதலாளியாயிருக்கிறன்,என்ரை அப்பா அண்டைக்கு என்னை அடிச்சுக்கொண்டு என்ரை சின்னம்மாவைப்பார்த்து “என்ரை பிள்ளையைக்கள்ளனாக வளத்திட்டியே” என்றதுதான் என்ர காதில இப்பவும் ஒலிச்சுக்கொண்டிருக்கிறது அம்மா...

நான் சின்னம்மாவும் தம்பியையும் இடைக்கிடையோ யாழ்பாணத்திலிருந்து கொழும்புக்கு லொறிகொண்டு போகேக்க கெருடமடுவில அவையிருக்கிற வீட்டுக்குப்போய் பார்த்திட்டு போறனான்.என்ரை அப்பாதான் இப்ப உயிரோடயில்லை.கடைசியாக என்னோடதான் இருந்தவர்.”என்று அருணாசலம் நாதழுதழுத்தார்.

கொஞ்சநேரம் எங்கள் எல்லோர்மீதும் அமைதி ஓர் நிழல்போல படிந்துவிட்டது. அது அவருடைய அப்பாவின் மௌனமாக இருக்கலாம்!.

அருணாசலமண்ணை எங்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு தனது லொறியில்(பார ஊர்தி)ஏறிக்கொண்டு கையசைத்துக்கொண்டு போய்விட்டார்.அதன் தடம் மட்டும் அந்த வீதியிலும் எங்கள் நெஞ்சிலும் இருந்துகொண்டிருந்தது.

நஸார் இஜாஸ்

# துயரில் திகழும் இரவுகள்

ஆயிரத்தொரு அரேபிய இரவுக்கதைகளை
பெர்ஸியாவின் கோட்டைக்குள் அமர்ந்து கொண்டு
ஒருத்தி உனக்குச் சொல்லிக் கொண்டிருப்பாள்.
உனக்குள் இருக்கின்ற உயிர்ப்பயத்தை
அங்கேயே புதைத்து விட்டு சுவர்களில்
அப்பியிருக்கும் சுவாரஷ்யத்தை
நீ அப்போது அள்ளிப் பூசிக் கொள்ளலாம்.
கதைகளைச் சொல்ல முனைகின்ற
ஷஹரஜாதாவை மாத்திரம்
நீ நன்றாக கவனித்துக் கொண்டிரு.
அவள் உனக்கும் அவளுக்கும் மட்டுமன்றி
ஒட்டுமொத்தமானவர்களுக்கும் உயிருக்கான
உத்தரவாதத்தை ஒவ்வொரு நாளும்
தந்து கொண்டிருப்பாள்.
அல்லது அதே இடத்தில் நாளை
நீ உட்கார்ந்து கொண்டு கதை சொல்லும்
நிலையை உனக்கு ஏற்படுத்தி விடுவாள்.
அந்த உரிமையை பெர்ஸியா பேரரசின்
மன்னனிடம் நீயே கேட்டுப்
பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.
இன்றைய இரவில் கொலை செய்யப்பட்ட
உனது கனவுகளை தூக்கி வீசி விட்டு
இந்த நடுநிசியிலும் கடுமையாக வீசுகின்ற
உனக்குள் புதைந்திருக்கும் துயரத்தை மீண்டும்
உனது முகத்தில் கொண்டு வந்து விட்டாய்.
போர்வையால் இழுத்திப் போர்த்திக் கொள்.
இனிமேலும் உனது ஒவ்வொரு இரவும்
துயரங்களை சுமந்தபடியே விடியப் போகிறது.

# விரிசல்..

பாலமுருகன்.லோ

“ஏங்கத் தண்ணீர் குழாயைத் திறந்து வைத்துப் பாத்திரம் அலம்ப வேண்டாம் என்று சொன்னேன் அல்லவா! எவ்வளவு முறை சொல்றது”

“சாப்பிட்ட பாத்திரத்தை அலம்பும் எனக்கு தெரியாதா?, எப்ப தண்ணீரை திறக்கனும்ன்னு”. சும்மா எதையாச்சும் சொல்லனும்னுச் சொல்லக் கூடாது.

“எதையாவது செய்யுங்க எனக்கு என்ன வந்தது” தண்ணீர் வீணா போகுதேனு தான் சொன்னேன்.

“ஏம்மா எனக்கு என்ன செய்யணும் என்று தெரியும். நீ என்னை ஏதாச்சும் சொல்லிக்கிட்டு இருக்க வேண்டாம்.” வேலைச் செய்ற எனக்குத் தெரியும்.

அந்த இரவு சமையலறையில் காரச் சாரமாக நிறைவு பெற்றது. ‘சம்பத் நினைக்கத் தொடங்கினான் ராஜா மாதிரி திரிந்து கொண்டு இருந்தேன். என்னைப் போய் இப்படி இந்தக் குடும்ப வாழ்க்கையில் தள்ளிவிட்டனறே! இதற்கு முக்கியக் காரணம் எனது தாயும், தந்தையும். முன்னமே தெரிந்திருந்தால் இந்தக் கல்யாணத்தையே வேண்டாம் என்று சொல்லியிருந்திருப்பேன்.’

இப்ப என்னடானா! தினதினம் சண்டை,போராட்டம் என்றால் யாரால் பொருத்துக் கொள்ள முடியும் சொல்லுங்க? கல்யாணத்திற்கு முன்னால் நான் எங்க வேண்டுமானாலும் எந்த நேரமானாலும் போயிட்டு வந்திடுவேன். ஆனால் இப்போ என்னால, எப்ப வேண்டுமானாலும் வீட்டை விட்டு வெளியே போக முடியவில்லை. வீட்டை விட்டு வெளியே செல்வதாக இருந்தால் உடனே கௌரி ஏங்க எங்க போறீங்க என்று கேட்பாள். அவளுக்குப் பதில் சொல்லாம அந்த இடத்தைவிட்டு நகர முடியாது.

★★★



இருவருக்கும் இந்த இடைவெளி எப்போதிருந்து ஆரம்பித்தது என்று பல நாள் யோசித்துப் பார்த்த பிறகும் கூட ஒரு தெளிவான பதில் சம்பத்துக்குக் கிடைக்க வில்லை. கல்யாணம் செய்த காலகட்டத்தில் இவர்கள் மற்ற தம்பதியர் போல்தான் அவ்வளவு ஓர் அன்னியோன்னியமாக இருந்தார்கள். வெளியில் இருந்து பார்ப்பவர்கள் அனைவரும் இந்த ஜோடி பொருத்தம் நல்லா இருக்கு என்பார்கள்.. இவர்கள் இருவரும் நல்லா இருக்கனும் பல காலம் என்று பலர் மனதில் நினைக்கும் படிதான் இவர்களும் இருந்தனர்.. பிறகு எப்படி இந்தப் பெரிய இடைவெளி உருவானது. இதற்கு முக்கியக் காரணம் என்ன?

சம்பத் மற்றும் கௌரி திருமணம் முடிந்து ஐந்து ஆண்டுகள் ஆன போது. இரு வீட்டாரும் மற்றும் ஊர் காரர்களும் பொதுவாக அவர்கள் காதுபடப் பேசுற ஒரு விஷயம் என்னவென்றால்? ஏதாவது விஷேசம் உண்டா என்று. இந்த ஒரே கேள்விக்கு இவர்கள் இருவரால் பதிலை சொல்ல முடியாமல். பல நாட்கள் இருவரும் அதே கேள்வியைத் தங்களது மனதில் போட்டு புளுங்கி கொண்டு இருப்பர். சம்பத்தும் சரி, கௌரியும் இதை இருவரும் வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார்கள். தனித்தனியே இந்த நிகழ்வை நினைத்து வருத்தபடுவர்.

இருவருக்கும் ஒரே எண்ணம் தான் தோன்றும். ஏன் இந்தத் தெரிந்தவர்களும், ஊர் மக்களும் ஒரே விஷயத்தையே கேட்கிறார்கள். இதைத் தவிர்த்து வேறு கேள்விகள் கேட்பதற்கு அவர்களிடம் ஒன்றும் இல்லையா? என்ன தவறு செய்தோம் நாங்கள். இப்படி நாள்தோறும் ஒருவர் மாற்றி ஒருவர் இதே கேள்வியைக் கேட்கும் போது பைத்தியம் பிடித்த மாதிரி ஆகிவிடுகிறோம். எங்கள் மேல் எங்களுக்கு அவ்வளவு கோபம் வருகிறது. எங்களிடம் காணப்படும் இந்த இடைவெளி யாரால் ஏற்பட்டது?

நாங்க இப்படி இருப்பதற்கு யார் காரணம்? எங்களுக்குக் குழந்தை வரம் கிடைக்காம தள்ளிப் போட்டுகொண்டே மேலேயிருந்து வேடிக்கைப் பார்கிறாரே அந்தக் கடவுள் காரணமா? நல்லா இருந்த எங்களை, இந்த ஒரே கேள்வியைக் கேட்டுக்கேட்டுப் பைத்தியம் பிடிக்கும் அளவிற்கு எங்களை அழைத்துச் சென்றிருக்கிறார்களே! இந்த உற்றார் உறவினர் மற்றும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் இவர்கள் காரணமா? யார் மீது குற்றம் சாட்டுவது? எங்களை நாங்களே நொந்துகொள்வதா? ஏன் நாங்க நாங்கலாக இருக்கக் கூடாதா? எப்பவுமே மற்றவன் என்ன சொல்லுவான் என்று நினைத்துக் கொண்டே வாழ முடுயுமா? அது சாத்தியமா?

★★★

அவரவர் அவர்களுது வேலையைப் பார்த்துகொண்டு இருந்தால் என்ன? ஏன் இவர்கள் மற்றவர் வீட்டு சன்னலை எட்டிப் பார்கிறார்கள். ஊர் மக்களை மற்றுமில்லை. ஏன் தெரிந்தவர்களையும் தான் நாங்க இருவரும் கேட்கிறோம். ஏன் அவர்களுக்கு அவர்களது பிழைத் தெரிய மாட்டேங்கிறது. போறப் போகில் கேட்டு வைப்போம் என்று அவர்கள் கேட்கும் அந்த ஒரு கேள்வி எங்க இருவரையும் எப்படிப் பாதிக்கிறது தெரியுமா? உடல் ரீதியா மட்டும் அல்லாமல் மன ரீதியாகவும் நாங்க அதிகம் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறோம்.

எவ்வளவுக்கு எவ்வளவு அன்னியோனியமாக இருந்தோமோ! இப்போது எலுயிம் பூனையுமாக மாற்றிவிட்டது இந்தத் ஒரே கேள்வி. என்னிடம் குறை இருக்கும் என்ற அவளும், அவளிடம் குறை இருக்கும் என்று நானும் மாற்றி மாற்றி யோசிக்கத் தொடங்கி. இப்போ! எப்பப் பார்த்தாலும் ஒருவருக்கு ஒருவர் சண்டையிட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். எங்களிடம் இருக்கும் ஈகோ தலைவிரித்து ஆடுது, இவர்கள் கேட்ட ஒரே கேள்வியினால்.

மருத்துவ மனைக்குச் சென்றாலும் அங்கும் ஒரே "அமளி துமளிதான்," என்னைப் பற்றி அவளும், அவளைப்பற்றி நான்னும் ஒரே புகார் மழைதான் மருத்துவரிடம். ஏன் டாக்டரே பார்த்து வியந்து போனார் என்றால் பார்த்துகொள்ளுங்கள். அந்த ஒரே கேள்வி எங்களை எப்படி மாற்றி இருக்கிறது என்று.

★★★

இருவரும் ஒரு முடிவிற்கு வந்த பிறகு மருத்துவமனைக்குச் சென்றனர். அங்கு மருத்துவர் இவர்களுடைய குறையைக் கேட்டு. ஒருவர் மாற்றி ஒருவராகப் பரிசோதித்துப் பார்த்தார்கள். ஆண்களுக்கு ஆண் மருத்துவரும் பெண்ணுக்கு மகளிர் மருத்துவரும் ஓர் இடத்தில் இருந்தமையால் இவர்களது காரியம் அலையாமல் இனிதே நிறைவடைந்தது அல்லாமல், இவர்களுக்குத் தீர்வும் கிடைத்தது. அங்க டாக்டரைப் பார்த்துச் சம்பத் தனது மனதில் உள்ளதை வெளிப்படையாகச் சொன்னான்.

" டாக்டர் இப்பெல்லாம் ஒரே கோபமா வருது"

" யார் மேல் கோபம் வருது சம்பத்?"

" இந்த ஊர் மேல, நம்மைச் சுற்றி இருக்கிறாங்கலே இவர்கள் மேல. ஏன் என் மேலையே எனக்குக் கோபம் வருது"

" சம்பத் நான் ஒன்னு சொன்னா தவறாம கேட்பீர்களா?"

" கட்டாயம் கேட்கிறேன் டாக்டர். நான் இப்போ என்ன செய்யனும்"

" நீங்க இருவரும் முதலில் இரத்த அளுத்தத்திற்கு மாத்திரை எடுத்துகொள்ள வேண்டும். அதன் பின்

நான் பரிந்துரை செய்த இந்த மாத்திரையைத் தவறாமல் எடுத்துக்க வேண்டும்.''

''சரி டாக்டர் அப்படியே ஆகட்டும்'' என்று கூறிவிட்டு சம்பத் மற்றும் கௌரி பைக்கில் வீடு திரும்பினர்.

அன்று இரவு உணவு சாப்பிட்டப் பிறகு, எல்லா அடுப்பு வேலையையும் முடித்துவிட்டு படுப்பதற்குப் படுக்கை அறைக்கு வந்தாள் கௌரி. அங்கு ஏற்கெனவே படுக்கையல் காத்திருந்தான் சம்பத்.

இவளை அறையினுள் பார்த்தவுடன், அவளிடம் ''கௌரி நான் உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டியது இருக்கு. இப்படி வந்து உட்கார்ந்துகொள்'' என்றான்.. நாம நம்ம வாழ்க்கையைப் பற்றிப் பேச வேண்டியிருக்கு என்று மீண்டும் அவளிடத்தில் கூறினான்.

''என்ன பேச்சு எல்லாம் புதுசா இருக்கு?''

''அதெல்லாம் ஒன்னுமில்லை, எவ்வளவு காலம் நாம இப்படி எலியும் பூனையுமா இருக்கப் போறோம்?''

''ஏன் அஃது உங்களுக்குத் தெரியாதா? முதலில் மற்றவர்கள் சொல்கிறார்கள் என்று கூறிக் கொண்டு என்னிடம் குழந்தையைப் பற்றிப் பேச்சு எடுக்க வேண்டாம்.''

''சரி சரி, எனக்குப் புரியுது, இனி நான் அவர்கள் இப்படிச் சொன்னார்கள், அப்படிச் சொன்னார்கள் என்று வந்து உன்னிடம் எதுவும் சொல்லமாட்டேன்.''

''கௌரி நான் உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்.''

''எதைப் பற்றிப் பேச போறீங்க''.

''இப்ப எல்லாம், அதுவும் சமீப காலமாக, நமது இடைவெளி அதிகமானதால, ஒன்றைப் பற்றி அடிக்கடி நான் நினைப்பதுண்டு.''

''எதைப் பற்றி அடிக்கடி நினைக்கிறீர்கள்.''

''பொறுச் சொல்லத்தான் போகப் போறேன்''

''ஏன் ஐயாவுக்கு அதற்குள் சலிப்பு தட்டி விட்டதா இந்தக் கல்யாண வாழ்க்கை?''

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை, தினதினம் சண்டை சச்சரவு என்றால் யாரால் பொறுத்துகொள்ள முடியும்.''

'' ஏன் நான் பொறுத்துகொண்டு போகவில்லையா. அதைப் போல் முயற்சி செய்யுங்க''.

''கௌரி நாம இனி வரும் வாழ்கையை இப்படியேதான் கழிக்கப் போறோமா?''

''அஃது உங்க கையில்தான் உள்ளது.''

சரி தப்பு எல்லாம் நான் செய்ததாகவே வைத்துக்கொள்ளலாம்.இனிமேலாவது நாம சண்டை போடாமல் வாழ முயற்சி செய்வோமா? மருத்துவர் சொன்ன மாதிரி, யாருடைய பேச்சையும் மனதில் போட்டுக்கொள்ளாமல். நாம் பயணிக்க இருக்கும் பாதையை நினைத்து நாள்தோறும் பேசினாலே போதும் நம் இருவருக்கிடையே அன்னியோன்னியம் உண்டாகும் மற்றும் நாம் இணக்கமாக இருக்க முடியும்.

''ஏம்மா கௌரி என்னைக் கொஞ்சம் மன்னித்துவிடு, நான் உன்னைச் சரியாகப் புரிந்துகொண்டு நடத்தவில்லை. கேட்பார் பேச்சை கேட்டு நான் எப்போதும் கடிந்துகொண்டேதான் இருந்திருக்கிறேன்.''

''ஏங்க அதெல்லாம் ஒன்றுமில்லை நானும் கூடதான் உங்கள் மீது தினதினம் கோபப்பட்டுத் திட்டி இருக்கறேன். இப்ப நினைத்தாலும் எனக்கும் அவமானமாக உள்ளது. முதலில் நான் தான் உங்களிடம் மன்னிப்பு கேட்டு இருக்கனும் ஆனால் நீங்க முந்திகிட்டு கேட்டுடீங்க.''

''ஏங்க நான் ஒன்னு கேட்கவா?''

'' ஒன்னு இல்லை பத்து கேளேன்'' என்ன இப்போ?''

''நாம இனி சண்டை போடாம இருக்க முயற்சி செய்வோம்''

''கட்டாயம் அதற்குதான் டாக்டர் நமக்கு இரத்த அளுத்தத்திற்கு மாத்திரை எழுதி கொடுத்திருக்கிறாரே அதை ஒழுங்காச் சாப்பிட வேண்டியது தான்'' அதன் பிறகு நமது இரத்த அளுத்தம் கட்டுக்குள் வரும். நாமும் முன்பு போன்று சண்டையிடாமல் இருந்தாலே போதும் பாதிப் பிரச்சனை தீர்ந்துவிடும்.

''சரி இனி, யார் என்ன சொன்னாலும் உங்களுக்குக் கோபம் வருமா?''

''வராது வரவே வராது''

இனியாவது நமது வாழ்வை நாம் வாழ முயற்சி செய்வோம். மற்றவர்களுக்காக வாழ்ந்த வாழ்கை இனி வேண்டாம். இதனால் நமக்கு மிஞ்சியது! நம் வாழ்வில் விரிசல் தான்..


இனி இருக்கும் காலங்களை நாம் சந்தோசமாக, நமக்கே உண்டான நமது வாழ்வை நாம் வாழ்வோம்.

இனி நம் வாழ்வில் எந்த விரிசலும் இல்லாமல் இருக்க நாம் பழகிக்கொள்வோம் என்று ஒருவருக்கு ஒருவர் கூறிக்கொண்டு நித்திரையில் ஆழ்ந்தனர்.

*Dr* ஜலீலா முஸம்மில், ஏறாவூர்

# மாயத்தின் பெருந்துரோகம்

இன்னும் என்னுள் இருக்கிறாய்
பின்னும் கண்ணில் புதைந்திருக்கிறாய்
இப்போதும் உன்னைக் கைவசம் வைத்திருக்கிறேன்
கண்டடைந்து வாழ்ந்திருக்கிறேன்
பாதுகாப்பற்ற தருணங்களிலும்
காவலுடைத்த கணங்களிலும்
பொத்திக் காத்திருக்கிறேன்



முற்பொழுதொன்றில்
எனக்கு
இலைமகுடம் சூட்டியதும்
உன்
மென்கரங்களுக்கு பூவாபரணம்
பூட்டியதும் நினைவில் எழ
கந்தர்வ வாசனையில்
லட்சம் தேவதைகள் சூழ்
சொர்க்கமாய் அந்தத்தோப்பு விளையாட்டு
வான்பரப்பில் விண்மீன்களாகும்

இந்த புன்னகை மிகவும் பழக்கமானது மிக்க சொந்தமானது
ஞாபகங்களை துலங்கச் செய்யும் ஒரு குளிர்தென்றல் காற்று போல
என் அந்தரங்கம் அறிந்திருக்கும் என் தொன்மம் தூண்டும் வாசனை போல
உயிர்ப்பூ திறந்தவிழ்க்கின்ற
வசியத்தின் வசீகரம்

பின்னரே அந்தத் துயரம் வந்தது
பின்னரே அந்தப் பாவம் அந்தம் தொட்டது
உன்னை நினைக்கும் நொடிகளில் எல்லாம்
கைவிட்டதை மறந்து விடுகிறேன்
மறந்து விடுதலைத் துறந்து விடுகிறேன்

உன் நினைவு வரும் போதெல்லாம் அது
மாயத்தின் பெருந்துரோகம் பூசப்பட்டதொன்றாயிருந்தாலும்

மறந்து போவதென்று நான் மனதுக்குச் சொல்லி இருந்தது
ஒரு ஒப்பனை
ஒரு ஒப்பந்தம்
ஒப்புக்கு சப்பாணி
ஒரு சப்பைக்கட்டு

ச.ஆனந்தகுமார்

# கனவு



எனைப்போலவே
அமர்ந்திருந்து உருவம் சலனமற்று..

உற்று நோக்குகையில்
அதன் முகம் மிக பிரகாசமாக
ஒளிர்ந்தது..

சுற்றியிருந்த அனைவரும்
அதை நோக்கியும்
வசீகரமான ஆடையை புகழ்ந்தும்
கொண்டிருந்தார்கள்..

நடக்கையில் அது
பறக்கிறது..
அழகான பொன் நிறத்தில்
மின்னுகிறது சிறகு..

அரண்மனைக்குள் நுழைந்து
வீடென்றது. உள்ளே என் ஆசைகள்
அனைத்துமிருந்தது

பள்ளியில் இழந்த
கோப்பைகள்..
கல்லுரி முதல் மாணவன்..
உலகின் ஆகச்சிறந்த நிறுவனத்தில் வேலை..

ஒருதலை காதலி
அவனருகில் நின்றிருந்தாள்..

யார் நீ என்றேன்

நீயே என் கடவுள்
என்றது.

மெதுவாய் அருகில் வந்து...

படைத்தது போதும்
இல்லாத சொற்களை இடைவிடாது
தேடியலைந்து
சுயகழிவிரக்கத்திற்குள் அமிழ வேண்டாம்..

இருப்பதற்குள்
கவிதை சமை..என்றது

அழுத்தமாய் முத்தமிட்டு என்னுள்
கலந்தது..

இரா.வெங்கடேஸ் குமார்

# நெகிழ்ந்திடும் மாய மனமே திகட்டாத வியப்பு தான்

அன்பின் மொழிகள் எல்லாம் புரிதல் கடந்து தொடுவது மனமே
ஆசை கொண்டு அதை தொடர்ந்து ஓடும் ஆர்வம் மனமே
அலை கடல் துளிகளில் ஆழியின் ஆழத்தை காண்பது மனமே
இசை மொழியில் இயல்பன்றி இருகியதை உருக்கிடும் மனமே

மனம் நினைக்கையில் தான் கிறுக்கல்கள் ஓவியமாய் தெரியும்
கலை மொத்த வடிவம் மனதை கொண்டு தான் விழி ரசிக்கும்
மலையென இருந்த கவலைகள் மனதால் அறிவை அடையும்
மழையென பெய்யும் மகிழ்ச்சியும் மனதால் அறிவில் பிறக்கும்

கண்ணில் தெரியாமலும், செவியால் கேட்க முடியாத மனமே
மணம் என ஒன்று நாசியை தொட்டதும் கவர்ந்திடும் மனமே
கரை தொட்ட அலை பாதம் தொட்டு சிலிர்த்திடும் மனமே
காலம் தோறும் மாற்றம் உணர்ந்திடும் மாயம் மனமே

மனதால் தான் ஈர்ப்பின் மொழிகள் மொத்தம் காதல்
மனதால் தான் காதல் நகர்வில் வாழ்க்கை தேடல்
மனதால் தான் சிறு சிறு நிகழ்வில் மகிழ்ச்சி ஓடல்
மனதால் தான் காமம், ஆர்வம், காதல், ஏர்ப்பு, ஊடல்

அறிவென நினைத்து சேர்த்தவை எல்லாம் நினைவுகள் தான்
நினைவுகள் மொத்தம் உணர்ந்திடும் வழியோ மனதோடு தான்
உணர்வோடு நினைவு வருகையில் அனுபவிப்பது மனம் தான்
இத்தனை நெகிழ்வுகள் செய்யும் மாய மனமே ஒரு வியப்பு தான்..

---

மலர்மகள்

# சுவை

உலுக்கி
உலுக்கி கை நிறைய
அள்ளி வரும் நாவல் பழத்தின்
சுவையோடு ஒட்டியே இருக்கிறது
கிராமத்து சிறார்களின்
வறுமை மண் துகள்கள்.



# எந்த நதியில் கரைப்பேன்

கமலினிகதிர், சுவிஸ்

வயோதிபம் எட்டிப் பார்க்கும் இந்தப் பருவத்தில் தான் நான் கடந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறேன்.இரத்தம் சுண்டும் நேரத்தில் தான் தவறுகள் தெரிய ஆரம்பிக்குமோ என்னவோ?இதைத்தான் சுடலை ஞானம் என்பார்களோ?இதுவரை காலமும் பணத்தேவைகளுக்காய் ஓடி யோடி உழைத்ததும்,பிள்ளைகளின் படிப்புக்கு காசு சேர்க்க வேணும்;, மகளின் கல்யாணத்திற்கு காசு என்று தலைதெறிக்க ஓடியதில் நின்று நிதானித்துப் பார்க்க நேரம் ஒதுக்கவில்லை.வேலையிலிருந்து ஓய்வு பெற்றாகிவிட்டது.இனிப் பொழுது போக என்ன செய்வது என்று நினைக்க மகள் தன்னுடன் கொஞ்சநாள் தங்குமாறு அழைத்தபோது

தான் பொட்டில் அறைந்ததுபோல் ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது. அவ்வப்போது தோன்றி மறையும் ஒரு குற்ற உணர்ச்சி மனைவிக்கு நோய் வந்தபோது நிரந்தரமாக வாட்டத் தொடங்கினாலும் அதை மனதின் ஒரு ஓரத்திலே தட்டித் தூங்க வைத்துவிடுவேன்.

ஆனால் இப்போது மனைவியையும் இழந்து தனிமையில் தவிக்கும் போது மனச்சாட்சி வேலைசெய்யத் தொடங்கியது.தங்கை வீட்டில் தங்கி இருப்பதால் சாப்பாட்டுக் கவலை இல்லாமலிருந்தது.மகள் இப் போது மன்னாரில் வேலை பார்ப்பதால் அங்கு வரும்படி கேட்டுக் கொண்டேயிருந்தாள்.'நெடுக அத்தைக்கு பாரமாயிருக்காதேங்கோ.நாங்க பிள்ளைகள் இருக்க அவ ஏன் உங்களை நெடுக பார்க்க வேணும்? அவவுக்கும் மகன் லண்டனில் தன்னிடம் வரச் சொல்லிக் கேட்டபடி யிருக்கிறான்.அவவும் கொஞ்சநாள் போய் நிண்டிட்டு வரலாமெல்லோ. நீங்க இருந்தா அவ எப்பிடிப் போறது?பேசாமல் என்னோடை வந்து இருங்கோ.உங்கடை மருமகனும் ஒன்றும் சொல்லமாட்டார்' மகளின் நச்சரிப்புத் தாங்க முடியாமல் போக சம்மதித்தேன்.அப்போதுதான் பேசாலையில் தங்கத்துடன் ஏற்பட்ட தொடர்பு ஞாபகத்திற்கு வந்து என்னை அலைக்கழிக்கத் தொடங்கியது.

எனது நாற்பத்தெட்டு வயதளவில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பேசாலைக்கு வேலை மாற்றத்தில் வந்தபோது குடும்பத்தை விட்டுப் பிரியும் நிலையேற்பட்டது.மகன் ஓலெவலும்,மகள் ஆண்டு ஒன்பதும் படிக்கும்போது அவர்களைப் பின்தங்கிய ஊரான பேசாலைக்கு அழை த்துச் செல்ல முடியாதென்பது புரிந்து என்ன செய்வதென்று யோசித் தேன்.உணவு விடயத்தில் நுணுக்கமாக இருக்கும் நான் மனைவியில் லாமல் எப்படி சமாளிப்பதென்று யோசித்தாலும் வேறு வழி இருப்பதாக தெரியவில்லை. பிள்ளைகளை ஹொஸ்ரலில் தங்கிப் படிக்க வைக்க மனைவி மறுத்துவிட்டாள்.கணவனின் வசதியா பிள்ளைகளின் வசதியா என்ற போராட்டத்தில் பிள்ளைப்பாசமே மேலோங்கி நின்றதில் நான் தனியவே புறப்பட வேண்டிதாய் போய்விட்டது.பேசாலை புகையிரத நிலைய அதிபராக இருந்ததால் எனக்கு குவாட்டேஸ் இருந்தது. ஆனால் சமையலுக்கு ஆள் கிடைப்பது சிரமமாக இருக்க போட்டர் மாரிடம் சொல்லி வைத்திருந்தேன்.அதுவரை போர்ட்டர் ஒருவர் தன் வீட்டிலிருந்து உணவு எடுத்து வந்து கொண்டிருந்தார்.மத்தியானமும், இரவும் எடுத்து வருவார்.காலையில் பாணுடன் சமாளிக்க வேண்டி யதாக இருந்தது.ஒரு கோப்பியோ,தேத்தண்ணியோ கூட போடத் தெரி யாமல் அவதிப்பட்டபோது மனைவி என் அம்மாவைக் குறைசொல்லித் தன் ஆற்றாமையை தீர்த்துக் கொள்வாள்.¨ஆம்பிளைப் பிள்ளைகள வளர்க்கத் தெரியாமல் வளர்த்து எங்கடை தலையில் கட்டி நாங்க படும்பாடு.என்ரை பிள்ளைகளைப் பாருங்கோ எப்படி வளர்த்திருக்கிறன்' என்று அடிக்கடி பெருமைப்பட்டுக் கொள்வாள்.காலையில் பால் வாங்கி வந்து போர்ட்டரே கோப்பி போட்டுக் கொடுக்கும் நிலையில் நான் லக்ஸ்;பிரேயை வாங்கி வைத்துக் கொண்டு கோப்பி போடப் பழகினன். அவசரத்துக்கு ஒரு முட்டை கூடப் பொரிக்கத் தெரியாமல் எனது வாழ்க்கை நாறித்தான் போனது துளசி சொல்றதைப்போல்.பார்ப்பவர்க ளிடமெல்லாம் சமையலுக்கு யாரும் பெண்கள் தெரிந்தால் கூறும்படி கேட்டபடியிருந்தன். வாய்க்கு ருசியாய் சாப்பிட்டு; பழகிய நாக்கு ருசி குறைந்த உணவை உண்ண மறுத்தது. வக்கணையாய் சாப்பிடப் பழக்கிய அம்மாவையும்,துளசியையும் நொந்து கொண்டபடியே என் பொழுது போனது.

கடைசியில் ஒரு போட்டர்'என் மகள் வந்து சமைச்சிட்டுப் போகட்டும். மத்தியானமே இரவு உணவையும் செய்விச்சிடுங்கோ.பள்ளிக்கும் இப்ப போகாமல் வீட்டில் சும்மாதான் இருக்கிறாள்.நீங்க காசைத் தாங்கோ' என்று அபயக்கரம் கொடுத்தான்.கீழே ஸ்ரேசனும் மேலே வீடுமிருப்ப தால் எனக்கு வசதியாகவே இருந்தது.நான் வேலையில் இருக்கும் நேரத்திலேயே அவள் சமைத்து முடித்துக் கழுவிக் கூட்டி விட்டுப் போயிடுவாள். பல நாட்கள் நான் அவளைப் பார்த்ததேயில்லை.ருசி யான சாப்பாடு கிடைத்ததில் எனக்கு பரம திருப்தி.என் உடுப்புக்க ளையும் தோய்த்து உலர்த்தி வைத்துவிட்டுப் போய்விடுவாள்.அவற்றை அயர்ண் பண்ணுவதே எனக்கு பெரிய வேலையாயிருந்தது. எல்லாம் ஒழுங்காகப் போய்க்கொண்டிருக்கும் வரை ஒரு சிக்கலும் ஏற்படவி ல்லை.பதினாறே வயதான சின்னப் பெண்தான் தங்கம். எனக்கு எந்த விதமான இடைஞ்சலும் இல்லாமல் வீட்டு வேலையை முடித்துவிட்டுப் போய் விடுவாள். என் சஞ்சலபுத்தி வரும்வரை எந்தக் குழப்பமும் இல்லை.

இப்போது மன்னாருக்கு வந்தபோதுதான் அந்த நினைவு வந்து என்னை மூச்சை முட்ட வைத்தது.முப்பது வருடங்களைக் காலம் விழுங்கி விட்டாலும் காலத்திற்கு பதில் சொல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டதை உணர்கிறேன்.ஆனால் இதுவரை அந்த நினைவுகளை ஒதுக்கி வைத்ததில் குற்ற உணர்ச்சி என்னைத் தீண்டாமல் பார்த்துக் கொண்டேன்.அதை ஒரு பெரிய விடயமாக நினைக்காமல் ஒரு சர்வ சாதாரண நிகழ்வாக என்னுடைய சபலத்திற்கு வடிகாலாக என்னால் எடுத்துக் கொள்ள முடிந்தது.இங்கு வந்த நாளிலிருந்து மகள் காஞ் சனா முன் போலில்லாமல் இப்போது என்னிடம் வித்தியாசமாக நடப் பது போல் உணர்;ந்தேன்.'அப்பா! ஒரு நாள் என்னுடைய அலுவலகத் திற்கு வாங்கப்பா. உங்களுக்குத் தெரிந்தவர்கள் சிலர் இருக்கலாம்' என்றாள். 'வீட்டில் பொழுதும் போகாமல் இருப்பதற்கு சும்மா போய் வருவம்' என்று போன எனக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அலுவலக பியூன் நகுலன் என்னை சிந்திக்க வைத்தான். எடுத்தவுடன் எதுவும் கேட்கக் கூடாதென்று பதட்டப்பட்ட மனதை அமைதிப்படுத்தினேன். காஞ்சனா என்னை அவதானமாகக்

கவனிப்பதுபோல் எனக்குத் தோன் றியது. எனக்கு ஏற்பட்ட சந்தேகம் போல் அவளுக்கும் ஏற்பட்டிருக் குமோ என்ற ஐயம் ஏற்பட்டபோது திடுக்குற்றேன்.

‘சீ அப்படியிருக்காது.ஓரிரு தடவை உறவில் அப்படிப் பெரிய விடயம் நடந்திருக்குமா?நான் ஏன் அப்பிடி நினைக்கிறன்.அந்தப் பியூன் நகுலன் என்னை அலைக்கழித்தபடி இருந்தான்.‘அவனது முகத்தில் என் சாயல் கொஞ்சமில்லை நிறையவே படிந்திருப்பது பிரமையா அல்லது உண் மையா?’மனம் அடித்தபடியிருந்தது.அதை காஞ்சனாவும் கவனித்திருப் பாளா என்ற நினைப்பே என்னை அச்சப்பட வைத்தது.அந்த நகுலனின் மேல் காஞ்சனாவுக்கு தனிப்பட்ட ஒரு அன்பு இருப்பது என்னை மேலும் பயங்கொள்ள வைத்தது.நெருப்புக்கு மேல் இருப்பதுபோல் உணர்ந்தேன்.அவன் பேசாலையைச் சேர்ந்தவன் என்று மேலதிகச் செய்தியைக் கூறி இன்னும் என்னை மிரள வைத்தாள்.‘அப்பா!நீங்க முந்தி பேசாலையில் வேலை பார்த்தனீங்களெல்லோ. அவன்ரை தாய் தகப்பனை சிலவேளை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.அவன்ரை பாட்டாவும் றெயில்வே போட்டராக இருந்தவராம். நீங்க ஸ்ரேசன் மாஸ்ராக இருக்கேக்கை சிலவேளை அவரும் இருந்திருக்கலாம். கதைச்சுப் பாருங்கோ’என்று சேர்த்துவிட்டாள்.எனக்கு வேர்த்துக் கொட்டியது.‘காஞ்சனா நோட்டம்விடுகிறாளா?எனக்கேற்பட்ட சந்தேகம் போல் அவளுக்கும் ஏற்பட்டிருக்குமோ?’தவறிழைக்கும் போது தோன் றாத பயம் இப்போது என்னை நடுங்க வைத்தது. அப்படியேதுமாக இருந்தால் எப்பிடி இந்த அவமானத்தைத் துடைப்பது?என்ன செய்யப் போகிறேன்.இரண்டு நாளாக காஞ்சனாவின் முகத்தில் முழிக்க வெட்கப் பட்டு அறைக்குள் முடங்கிக் கிடந்தேன்.வெற்றுச் சுவர்களுக்குள் முடங் கியதால் குற்றஉணர்வு போயிடுமா என்ன? அவள் பேசினாலாவது மனப் புழுக்கம் குறையாதா என்றிருந்தது. அவளும் கதைக்காமல் மௌனம் காத்தாள்.கடிகார முட்கள் கச்சிதமாய் தன் கடமையைச் செய்த வண்ணமிருந்தன. கடிகாரம் விரைந்து ஓடி எதையும் கேட்காமல் பண்ணி என்னை யாழ்ப்பாணம் அனுப்பி விடாதா என்று பதைபதைத்தேன். நெஞ்சுவலி வந்து போய்ச் சேர்ந்திட மாட்டேனா என்று மனம் அங்கலாய்த்தது.

காஞ்சனா கணவன் இல்லாத ஒரு நாளில் நகுலனை வீட்டிற்கு வரவ ழைத்தாள்.‘உம்மடை பாட்டாவையும் ஒருநாளைக்கு கூட்டிவாரும். அப்பாவை அவருக்குத் தெரிந்திருக்கலாம்.நகுலனுக்குத் தாயில்லை அப்பா.அவன்ரை தகப்பனும குழந்தையைக் குடுத்திட்டு; தாயைக் கல்யாணம் செய்யாமல் ஏமாற்றி விட்டுப் போயிட்டான்.’கூறிவிட்டு என் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள்.¨ஓ! மனம் தடுமாறியது. மனதுக்குள் புதைத்து வைத்த சம்பவம் எப்போது உடைத்துக் கொண்டு வெளியே வந்துவிடுமோ என்று பதறியது.முப்பது வருடங்களுக்கு முன் வேலை மாற்றத்தை எதிர்பார்த்துக் கொண்டு இருந்த வேளையில் அந்தச் சின்னப் பெண்ணின் அறியாமையையும், தனிமையையும் நான் பயன் படுத்தீற்று ஓடிய கோழைத்தனம் இப்போது அவமானப்பட வைத்தது. அன்று செய்த ஒரு தவறு கைகால் முளைச்சு கண் முன்னே இன்று ஒரு வாலிபனாய் வந்து நிற்கிறதோ?அவனை நேருக்கு நேர் பார்க்க முடியாமல் நெஞ்சு பதறியது.இரண்டு மூன்று நாள் என் சபலத்திற்கு அவளைப் பலியாக்கிவிட்டு அவள் கர்ப்பம் ஆனது கூடத் தெரியாமல் இருந்திருக்கிறேனே. இப்ப மகளுக்கு முன்னால் அவமானப் பட வேண்டி யிருக்குதே.என் மனவிகாரம் என் மனதின் கறுப்புப் பக்கம் மெல்ல மெல்ல விலகப் போகும் தருணத்தை எதிர் நோக்கும் நேரம் வந்து விட்டதை உணர்கிறேன். காஞ்சனாவுக்கு முன் தலை குனிந்து நிற்கும் அவலம் என் மனதை விறாண்டி எடுக்கிறது.விறைப்பூசி போட்டது போல் உடல் உணர்வற்று விறைத்தது.வீட்டையொட்டி நின்ற செடிகள் என்னைப்போல் பயந்து நடுங்கி ஆடியபடி பெரிய மரத்தின் பின்னால் ஒளியத் தயாராயின.

காஞ்சனாவையோ,அந்தப் பெடியன் நகுலனையோ நிமிர்ந்து பார்க்கத் தைரியமின்றி அவதிப்பட்டன்.மன்னாரின் வெப்பக்காற்று அனலை வாரி வீசியது.அதைப்போலவே என் மனமும் வெந்துகொண்டிருந்தது.கொளுத் தும் சூரியன் கூட மறைந்து உலகம் இருளில் மூழ்கிடாதா என்றிருந் தது. கைகால்கள் நடுங்கத் தொடங்கின.வாய் உலர்ந்து பேச்சு மறந்து விட்டது போலிருந்தது.காஞ்சனாவின் மனத்திலிருந்து கசப்பு துளித் துளியாய் மெல்ல மெல்ல இறங்கி வெளியே கசிந்து கொண்டிருப்பது அவளது கண்களில் தெரிந்தது. என்னை வெறுப்புடன் பார்ப்பது புரிந்து வெட்கித் தலை குனிந்தேன்.சொற்களைப் பாவிக்காமல் பார்வையால் பார்க்கும் அவள் பார்வை என்னைக் கொல்லாமல் கொன்றது. அவ்வளவு வெறுப்பிலும் என்னைப் பார்ப்பதை விலக்கி நகுலனுடன் அன்பாகப் பேசி உணவு கொடுத்தாள்.அவனை அனுப்பிவிட்டு என்னிடம் எரிமலையாய் சீறினாள்.இவ்வளவு நேரமும் அடக்கி வைத்திருந்த கோபம்,அவமானம் எல்லாம் என்மேல் பாய்ந்தது.

‘உங்களை அப்பா என்று சொல்லவே கூசுது. எவ்வளவு கேவலமான வராக இருந்திருக்கிறீங்க. யாரப்பா அந்த நகுலன்? உங்கடை மகன் தானே.சொல்லாமல் மறைச்சிட்டா இல்லையென்று ஆயிடுமா?’ அமைதியைக் கிழித்துக்கொண்டு ஒவ்வொரு வார்த்தையும் காற்றைத் துணைக்கழைத்துக்கொண்டு என்மேல் பரவின.மனதுக்குள் பதுக்கி வைக்கப்பட்ட சொல்லப்படாத உண்மை தோலுரிக்கப்பட்டு வெளியில் வந்து விழுந்தது.அப்பா என்ற பிம்பம் உடைந்து நொருங்கிய ஆற்றாமையில் காஞ்சனா கத்தினாள்.ஒவ்வொரு வார்த்தையும் வாள் கொண்டு அறுப்பது போல் இருந்தது.தலைகுனிந்து நிற்பதைத் தவிர வேறு வழி இல்லை.அவளது வார்த்தைகள் உள்ளத்துள் நேராகப் புகுந்து ஆழமான வேதனையை எனக்கு ஏற்படுத்தியது. ‘சந்தர்ப்பம் ஏற்படாத வரைக்கும் யாருமே தப்பு செய்வதில்லை.தப்பு செய்ய சந்தர்ப்பம் இருந்தாலும் செய்யாமல் இருக்கிறவன் தான் மனுசன்.நீங்க தனிமை, உடல் தேவை என்று ஆயிரம் காரணங்கள் சொல்லலாம்.

ஆனால் அதில் நியாயம் இருக்கா? அம்மாவுக்கும் அந்த உடல் தேவை இருந்திருக்கலாம் இல்லையா? நாங்கள் உடனிருந்ததால் தனிமை இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் உடல்தேவை என்பது ஆண் பெண் இரண்டு பேருக்கும் பொதுவானதுதானே.அம்மா இப்பிடிச் செய்திருந்தால் நீங்க பொறுத்து இருப்பீங்களா? நல்ல காலம் இதுகள் தெரியாமல் அம்மா செத்துப் போனது.உங்களை நல்லவன் என்று நினைத்துக் கொண்டு போய்ச் சேர்ந்திட்டா. நல்லவனாய் இல்லாட்டாலும் பரவாயில்லை.கெட்டவனாய் இல்லாமல் இருந்திருக்கலாம்.செய்த தப்பு க்கு பிராயச்சித்தம் என்றாலும் செய்திருக்கலாம்.ஒரு சின்னப்பிள்ளை யை ; தாயாக்கிப்போட்டு கொஞ்சமும் உறுத்தல் இல்லாமல் மறந்த மாதிரி இவ்வளவுநாளும் இருந்திருக்கிறீங்களே. ’

பொட்டில் அறைந்தது போல் சாட்டையடியாக கேட்டாள் காஞ்சனா. இப்பத்தைப் பிள்ளைகள் எதையும் மறைக்காமல் நேருக்குநேர் கேட்குதுகள்.கூனிக் குறுகிப் போனேன்.‘அந்த நகுலனுக்கு என்ன பதில் சொல்லப் போறீங்க. அவனிட்டை சொல்லவா?நீங்கதான் ஏமாத்தீற்று ஓடின அவனுடைய அப்பா என்று.அம்மாவை ஏமாத்திட்டு ஒரு ஸ்ரேசன் மாஸ்ரர் ஓடீற்றார். அம்மாவும் அவமானத்தோடை வாழ்ந்திட்டு செத்துப்போச்சு. பாட்டா சொல்லிச் சொல்லி இப்பவும் அழும்.எவ்வளவு அடிச்சன் என்ரை தங்கத்தை.யாரோ செய்த பிழைக்கு அவள் எவ்வளவு அடி வாங்கினாள்.உனக்காகத்தான் என்ரை தங்கம் வாழ்ந்தாளடா. ஏழையாயிருந்தாலும் மானத்தோடை வாழ்ந்த நாங்க ஊருக்குள்ளை அவமானத்தோடை இண்டை வரைக்கும் வாழுறம். அவனைத் தேடிப் பிடிச்சு நாலு கேள்வி கேட்க முடியாமல்போயிட்டுது¨ என்று அவன் பாட்டா அடிக்கடி சொல்வதாகச் சொன்ன போது அது நீங்களாய் இருக்கக் கூடாது என்று நான் வேண்டாத தெய்வமில்லை. இவருக்கோ இல்லை தம்பிக்கோ தெரிந்தால் எவ்வளவு வெட்கக்கேடு. சீ உங்களை எங்கடை அப்பா என்று சொல்லவே வெட்கமாயிருக்கு. செய்கிறதையும் செய்திட்டு நல்லவன் வேஷம் போட்டு எங்களையெ ல்லாம் ஏமாத்தியிருக்கிறீங்க. நீங்களெல்லாம் ஒரு மனுசனேயில்லை.¨ என்னை அம்மணமாக்கி சாட்டையால் அடித்தது போல் உணர்ந்தேன்.

‘எந்தக் நதியில் இந்தப் பாவத்தைக் கரைக்கப் போறீங்க. நாளைக்கே நகுலனின் பாட்டாவை வரச் சொல்லவா?அவர் வந்து தன் ஆத்திரம் தீருமட்டும் அடிக்கட்டுமா?இந்தப் பெரிய தப்பை செய்திட்டு எந்தக் குற்ற உணர்ச்சியும் இல்லாமல் அதைச் சரிக்கட்ட எந்த முயற்சியும் எடுக்காமல். உங்களை அப்பா என்று சொல்லவே நாக்கு கூசுது.சீ!’ அருவருப்புடன் என்னைக் கடந்து போனாள் என் மகள் காஞ்சனா. வீட்டருகே இருந்த மரம் தன் இலைகளைக் கொட்டிக் கொண்டிரு ந்தது.மீண்டும் மரங்களுக்குச் செல்ல முடியாத இலைகள்போல் கூனிக்குறுகி அவளது முகத்தைப் பார்க்கும் அருகதையை இழந்து வீட்டை விட்டு வெளியேறினேன்.

மெய்யன் நடராஜ்

# லிமரைக்கூ

போட்டியிடக் கட்சிச் சின்னம்
மக்கள் சேவையை மறக்கு மாயின்
சமுதாயத்தில் அவமானச் சின்னம்

❍

சிலந்தி பின்னும் வலை
சிக்கிக் கொள்ளும் பூச்சிகளுக் கெல்லாம்
அந்தோ பரிதாப நிலை

❍

மாடி வைத்த வீடு
கட்டி முடிக்கும் முன்பே தெரியும்
உடம்பில் எலும்புக் கூடு

❍

உயரம் குறையும் குச்சி
புகழ்ந்து தள்ளுகிறார்கள்
வாசனையை மெச்சி


❍

கர்வத்துடன் லம்போர்கினி வண்டி
சமிக்ஞை விளக்குச் சந்தி அருகாமையில்
தன்னடக்கத்துன் குப்பை வண்டி

❍

பீதியூட்டி வீதிகளில் பயணம்
தீ அணைத்துத் திரும்பும் வண்டியில்
அபாயப் பேரொலி சயனம்

சிறுகதை



# பூனை கற்பித்த பாடம்

**நீலம் மூன்**

புழக்கடையில் சாமான் கழுவும் தண்ணீர் மற்றகழிவு நீர்சிறு ஓடையாகச் சென்று பூச்செடிகளில் விழும். கிராமப் புறங்களில் இவ்வாறு தான் சாக்கடை அமைந்து இருக்கும்.

பள்ளியிலிருந்து வீடு திரும்பிய ஹாசினி குட்டி புத்தகத்தை வராண்டாவில் வைத்து விட்டு ஷூ காலுடன் புறக் கடைக்குச் சென்றாள்.

நேற்று வேப்ப மரத்தின் அடியில் பூனை நான்கு குட்டிகள் போட்டு வைத்திருந்தது. அக்காட்சியை பார்க்க விரைந்தாள்.

ஐயோ பாவம் என்று முட்டி போட்டு அமர்ந்து தென்னங்குச்சியால் சாக்கடையை கிளறினாள்.

“ஹாசினி எங்கே இருக்கே? புத்தி இல்ல வரண்டாவிலா புத்தகத்தை இப்படி போட்டுட்டு எங்கே போய் தொலைஞ்சே?” கத்தினாள் ஷாலினி.

சாக்கடையில் விழுந்திருந்த பூனைக்குட்டி ஒன்றின் உடம்பெல்லாம் தண்ணீர் ஒட்டி பரிதாபமாக மியாவ் மியாவ் என மெல்லிய குரலில் கத்தியது.

ஹாசினிக்கு, செல்ல பூனையை எப்படி தூக்குவது என்று தெரியலையே என் தங்க குட்டியென அவள் அப்பா கொஞ்சுவது போலவே பூனையை கொஞ்சினாள். சாக்கடையில் கைவைத்து பூனைக்குட்டி தூக்கினால் யூனிபார்ம் சகதியானது.

மகளை அழைத்து குரல் கொடுத்தும் மகள் வராததால் மகளைத் தேடி புழைக் கடைக்கு வந்தாள்.மகள் நின்ற காட்சி எரிச்சலை மூட்ட'' இந்த தரித்திரத்தை கீழே போடு. கொஞ்சமாக அருவருப்பு இருக்கா பாரு, அப்படியே அப்பனையே உரிச்சிகிட்டு வந்து இருக்குமா?''

''இந்த பூனக்குட்டி தண்ணீரில் விழுந்துடுச்சும்மா''

''அறிவு கெட்ட முண்டம் யூனிபார்ம் அழுக்காது. நல்ல தண்ணில உடம்ப கழுவு என இழுத்தாள்.

பக்கத்திலிருந்து வேப்பங்குச்சியால் மகளின் கால் மீது ஓர் அடி வைத்தாள். ''அப்பா அப்பா'' என்று ஹாஷினி அழத் தொடங்கினாள்.

அப்பொழுதும் பூனைக்குட்டியை கீழே விடவேயில்லை.

''புத்தியைப் பாரு அப்பாவா' அப்பா தண்ணில குளிப்பாட்டினா செத்துப் போகாது .

அப்போ துணி தாம்மா துணி தாம்மா என கையை நீட்டினாள் .

4 வயது மகள் செய்யும் ரகலையைத் தாங்க முடியாமல் எப்படியாவது பொய் தொலை'' எனக் கூறிவிட்டு வீட்டில்உள்ளே சென்றாள்.

''ஊரு உலகத்துல அடிச்சா யாரும்அம்மா அம்மா என்று தான் கத்துவாங்க இந்த தடிமாடு அப்பாவா அப்பா அந்த ஆளே வந்து மகளே கொஞ்சட்டும் கொஞ்சட்டும் பொறுப்பில்லாத மனுஷன்'' என்று தன் கணவன் ரஞ்சித்தை திட்டி தீர்த்தாள். அன்னை கோபத்தினால் விளையும் விபரீதத்தை உணராமல் பூனையை கையில் ஏந்தி உள்ளே நுழைந்தாள். மகளின் செயலைக் கண்டு ஆத்திரம் எல்லையைக் கடக்க, ஏய்! உன்னை யார் உள்ளே வர சொன்னது? போ வெளியே போ'' என பிரம்பால் உடம்பில் ஒரு அடி அடித்தாள்.

அந்நேரத்தில் வீடு திரும்பிய ரஞ்சித் ''ஷாலினி குழந்தை கிட்ட எதுக்கு கோபம்''. ''வாங்க உங்க மகள் நிக்கிற கோலத்தை பாருங்க'' கோபத்தில் கட்டியது மூச்சு இரைத்தது.

''அப்பா பூனை குட்டி சாக்கடையில் விழுந்துடுச்சுப்பா, பாவம் அதுக்கு ஜுரம் வராது''.

''ஆமாபெரிய மதர் தெரேசாவை உருவாக் கிட்டாங்க'' முகத்தை மோவா கட்டையில் இடித்துக் கொண்டாள்.

''அப்பா பூனையே குளிப்பாட்டுங்கப்பா'' ''வேண்டாம் குச்சிமா பஞ்சு கொண்டு வருகிறேன், என்று உள்ளே சென்றவன் பஞ்சுடன் வந்தான். பூனை உடம்பில் உள்ள சகதியை துடைத்து மென்மையான டவலில் மேலே போட்டு தாயிடம் வைத்தான்.

ஹாசினி யூனிபார்ம் கழட்டு உன் கை உடம்பு எல்லாம் கழுவு என்று மகளுடன் குளியல் அறைக்கு சென்றான்.

சற்று நேரத்தில் இருவரும் குளித்து வெளியே வந்தனர். தந்தையின் தோளில் சுதந்திரமாக அமர்ந்தவள், ''அப்பா எங்க மிஸ் ஒரு ரைம்ஸ் சொல்லிக் கொடுத்தாங்க'',

''ஓ அப்படியா செல்லம், எங்கே பாடுங்க பாக்கலாம்''

''புசி கேட் புசிகேட் வேர் ஆர் யூ கோ'' என்ற பாடலை ராகத்துடன் பாடி காட்டினாள்.

டாக்டர் ரஞ்சித் ஒரு டாக்டர் நகரத்தை விட்டு கிராமத்திற்கு சேவை செய்ய வந்திருப்பவன் .நாலு தலைமுறைக்கு சொத்து இருந்தாலும் பொதுசேவை மனப்பான்மையால் கிராமத்தை நாடி வாழ்க்கையில் நிறைவு காண்பவன். ஷாலினிக்கு தன் கணவன் போக்கு பிடிக்கவில்லை. பகட்டு வாழ்க்கை வாழாமல் கிராமத்தில் ஓட்டு வீடும் சாக்கடையும் புழுதியுமாக உள்ள வீட்டில் வாழ பிடிக்காமல் சகித்துக் கொண்டு வாழ்ந்தாள்.

ஆனால் தான் கெட்டதும் இல்லாமல் தன் வனத்தையே கெடுக்கும் குரங்கு போல ரஞ்சித் தன் மகளின் மனதிலும் சேவை மனப்பான்மையை விதைத்தான். அத்தகையப் போக்கை ஏற்க முடியாமல் தவித்தாள்.

அன்று இரவு மகளை நெஞ்சில் போட்டு ''ஹாச்சினிகுட்டி உனக்கு என்ன படிக்க ஆசை சொல்லுடி தங்கம்'' என்று சிரிப்போடு கேட்டேன்.

''அப்பா மாதிரி டாக்டராக'' எனக் குழந்தை பதில் சொன்னதும்.

ஷாலினி துள்ளி குதித்து எழுந்தாள். ''கிழிந்தது கிருஷ்ணகிரி உங்கப்பன் படிச்ச படிப்பே நார்து. இதுல நீ படிச்சா...புருஷனா வர்றேன் உன் பாடு திண்டாட்டம் தான் அவள் முதுகில் ஒரு தட்டு தட்டினாள்.

''குழந்தையை திட்டாதே ஷாலு எனக்கு நாலு ஹான்ஸம் குழந்தைங்க பிறந்தால்... எப்படிபுழக்கடையில் பூனைக்குட்டி போட்டது போலவா'' கணவன் பேச்சை கேட்டு வெறுப்பில் கிண்டல் அடித்தாள்.

''அப்பா! எனக்கு தம்பி பாப்பா பிறந்தான்னா அவனும் டாக்டராகனும் இல்லப்பா ஆமா ஆமா செல்லக்குட்டி

கோபம் மகிழ்ச்சியான சூழ்நிலையாக மாறியது.

வீட்டு கதவு தட்டும் ஓசைகேட்டு எழுந்தான் வெளியே வந்தான் ரஞ்சித் கொஞ்ச நேரமும் நிம்மதியா தூங்க முடியல எல்லாம் தலையெழுத்து என சலித்துக் கொண்டாள் ஷாலினி.

"டாக்டர் ஐயா, டாக்டர் ஐயா, என் மகளை காப்பாத்துங்க ஐயா" என்ற கண்ணீரும் கம்பளையுமாக மகளை தூக்கி வந்திருந்தான்.

"ஓ மை காட் நல்ல காய்ச்சல் உடனே டிஸ்பென்சரிக்கு எடுத்துட்டு போகணும். என் காரை எடுத்துட்டு வரேன் இருங்க" என்று அந்த குழந்தையை தன் காரில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றான்.

துன்பப்பட்டவளின் நிலையை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்து குணப்படுத்தி நல்ல பெயரையும் பெற்றிருந்தான்.

நாட்கள் நகர்ந்தன. கோவில் திருவிழா ஓரெங்கும் விழா கொண்டிருந்தது.

ஷாலினி தன் குழந்தை ஹாசினியுடன் விழாவில் கலந்து கொண்டாள். வானவேடிக்கை விளையாட்டுகளை கண்டு மகிழ்ச்சியுடன் சூழ்நிலைக்கு ஏற்ப தன்னிலை மறந்தாள்.

அந்த சமயத்தில் காளை மாடு ஓடி வந்தது. எப்படி ஓடுவது என்று திகைத்து நெஞ்சில் அச்சத்தை ஏற்படுத்தி ஹாசனியை நெஞ்சோடு பிடித்துக் கொண்டு ஓடினாள்.

ஷாலினி கட்டிருந்த கருப்பு சேலை மாட்டிற்கு துரத்தியது ஷாலினி ஓடினான் மாடு பின் தொடர்ந்து ஓடியது.மாடு பின் தொடர்ந்து உடையது காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என மூச்சு வாங்க கத்தினாள். மக்கள் கயிறு பிடிக்க தொடர்ந்து ஓடி வந்தனர். சமயோசிகமாக வீட்டில் வேலை செய்யும் சிறுமிஒருத்தி ஓடி வந்தாள் ஷாலினி காப்பாற்ற இனி மாட்டிற்கு இடையில் புகுந்தது அச்சிறுமையின் வயிற்றை கிழித்து கீழே தள்ளியது. மாட்டின் ஆவேசமும் தணிந்தது.

ஷாலினி உருண்டு கீழே விழுந்தாள் உயிரின் உன்னதத்தை அப்பொழுதுதான் உணர்ந்தாள். ஷாலினி தன் கணவன் செய்யும் தொழில் எத்தகைய உயர்ந்த நிலை உடையது அதைப்போற்றிப் புகழாமல் எவ்வளவு துன்பப்படுத்தி இருக்கேன் என குற்ற உணர்ச்சி உள்ளத்தில் எழும்பியது.

அச்சிறுமிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது அவள் உயிர் பிழைக்க போராடினாள். தனக்கு நான்கு குழந்தைகள் பிறந்தாலும் மருத்துவ துறையில் படிக்க வைக்க வேண்டும் என்ற சேவை மனப்பான்மை ஷாலினி உள்ளத்தில் புரிந்தது அறியாமையை மாற்றிவிடும் சக்தி காலத்திற்கு உண்டு.

சாந்தி மாரியப்பன்

# கை விடப்பட்ட கூடு

உடைந்த சுள்ளிகளும் பஞ்சுப்பிசிறுகளும்
பாதி பின்னிவிடப்பட்டிருக்கும் நார் இழைகளுமாய்
முற்றுப்பெறாமல் நிற்கும் அக்கூட்டில்
முராரி ராகமிசைக்கின்றன
அங்கே பொரிக்கவிருந்த பறவைக்குஞ்சுகள்
யாருமற்ற கூட்டின் சுவர்களில்
எதிரொலித்து அடங்குகிறது அந்த இசை

ஒரு கனவு ஆரம்பிக்கும் முன்னரே
முடங்கி
கைவிடப்பட்டதன் கதை
கேள்விக்குறியாய் நிற்கிறது அதன்முன்
கனவுகள் எல்லாமே
கண்டு கைவிடப்படுவதற்கு மட்டுந்தானா?
முழுமை பெறாத கனவுகளின் நினைவுச்சின்னமாய்
இனியெப்போதும் அந்தக்கூடு
அங்கேயே காத்திருக்கும்
என்றாவது ஓர்நாள் அப்பறவைகள்
அக்கூட்டின் நலம் விசாரிக்க
அங்கே வரக்கூடும்
கைவிடப்பட்ட இன்னொரு பறவைக்கு
இந்தக்கூடு அடைக்கலமாகவும் கூடும்

முழுமையடையா பறவைக்கூடு
வெற்று மௌனத்துடன் உறைந்து
ஒரு துயரச்சின்னமாய்
முடிவிலா சோகத்துடன் காத்திருக்கிறது
கிளைகள் காற்றில் மெல்ல அசைகின்றன
எங்கிருந்தோ ஒரு குயிலின் கூவல் கேட்கிறது
முடிக்கப்படாத இந்தக்கூட்டின்
கதை அறியாது
அதைக்கடந்து செல்கிறார்கள்
அது கைவிடப்பட்டதன் துயரமும் அறியாமல்.



# அக்னி சாட்சி

**மீ.யூசுப் ஜாகிர்,வந்தவாசி**

அஸ்தினாபுரம் அலமேலு ஆச்சிக்கு நான்கு பிள்ளைகள் இரண்டு ஆண் பிள்ளைகள், இரண்டு பெண் பிள்ளைகள். நடுத்தர குடும்பத்தில் பிறந்த கதிரேசனுக்கு வாக்கப்பட்டு வரும் போது கதிரேசன் கூலி வேலைக்கு சென்று கொண்டிருந்தார். சூதும், குடியும் இல்லாமல் கதிரேசன் ஒரு நாளை கூட கழித்ததில்லை. அலமேலு ஆச்சிக்கு இருக்கும் தன்னம்பிக்கையும், துணிவும் தான் கதிரேசனோடு அவள் வாழ்க்கையை வாழ வைத்தது. அவள் அரும்பாடு பட்டு, போராடி நான்கு பிள்ளைகளையும் நன்றாக வளர்த்து ஆளாக்கி திருமணம் செய்து வைத்தவள்.

எத்தனையோ கஷ்டங்களை, சுமைகளை சுகமாக கடந்து வாழ்வை வென்று இன்று வயோதிகத்தின் வாசலில் நிற்கிறாள்.

வயதில் ஓடி ஓடி உழைத்த கால்களும்,கைகளும் வலுவிழுந்து கிடக்கிறது. தள்ளாத வயதிலும் தன்னை பார்த்துக்கொண்டவள்., பல தோப்புகளை உருவாக்கி விட்டு காலத்தின் பிடியில் தனிமரமாய் நிற்கிறாள்.

மூத்த மகன் சிதம்பரம் சொந்தமாக ரைஸ் மில் வைத்திருக்கிறான். டிகிரி படிக்கும் போதே காதல் திருமணம் செய்துக்கொண்டான். மனைவி வழி சொத்து கிடைத்ததும் பகட்டாக வாழ்ந்துகொண்டிருந்தான். திருமணம் செய்து இருபது வருடங்கள் ஆகியும்

இன்னும் அவனுக்கு வாரிசு கிட்டவில்லை. சிதம்பரம் மனைவி மீனாட்சி படித்தவள் என்பதால் எப்போதும் கொஞ்சம் திமிர் அதிகம்.

இரண்டாவது மகன் வரதன் பள்ளிப்படிப்பை கூட முடிக்காமல் எட்டாம் வகுப்பிலேயே படிப்புக்கு முழுக்குப்போட்டு விவசாய வேலைகளை பார்த்துக்கொண்டு தற்போது சொந்த ஊரிலேயே விவசாயம் செய்து வருகிறான். வரதனின் மனைவி செங்கமலம் அதிகம் அதிர்ந்து பேசாதவள்., இவர்களுக்கு இரண்டு பெண்பிள்ளைகள் நித்யா, சத்யா என்று இருவரும் பத்தாம் வகுப்பு படித்து கொண்டிருக்கிறார்கள்.

மூன்றாவது மகள் வள்ளியம்மைக்கு பலசரக்கு கடை வைத்திருக்கும் சுந்தரத்திற்கு திருமணம் செய்து கொடுத்தார்கள். சுந்தரம் பெரும்

கருமியாக இருப்பார். மனைவி வீட்டிற்கு திருமணம் முடிந்து சென்று வந்தது தான் பிறகு எப்போதும் கடையை விடுமுறை விட்டு எங்கும் போகமாட்டார். குழந்தைகள் பிறந்தபோது கூட இடைவேளை நேரம் போய் பார்த்துவிட்டு திரும்ப வந்துவிடுவார். இவர்களுக்கு ஓர் ஆண் பிள்ளை, ஒரு பெண் பிள்ளை.

இப்படி ஒரு ஆளோடு வாழ்ந்து கிட்டத்தட்ட வள்ளியம்மையும் கஞ்சதனத்தை ஏ(க)ற்றுக்கொண்டாள் என்று தான் சொல்லவேண்டும்.

நான்காவது மகள் அழகம்மை பெயருக்கு ஏற்றது போல அவ்வளவு அழகாக இருப்பாள். அழகு ஆபத்து என்பது போல அதிகம் திமிர் கொண்டவள் எல்லோரையும் எடுத்தெறிந்து பேசுவதில் இவளுக்கு நிகர் இவளே தான். ஹோட்டல் நடத்தி வரும் சந்தானத்திற்கு அழகம்மையை திருமணம் செய்து கொடுத்தார்கள்.

இவளுக்கு ஒரே ஒரு பெண் பிள்ளை மட்டும் தான்.

இப்படியாக அலமேலு ஆச்சியின் நான்கு பிள்ளைகளும் நன்றாகவே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். கதிரேசன் மறைந்தப்பிறகு அலமேலுவை பெயரளவில் தங்களோடு வந்து விடும் படி அனைவருமே கூப்பிட்டார்கள் தான் ஆனால் யாருக்கும் அதில் விருப்பமில்லை என்பது அலமேலு ஆச்சிக்கு நன்றாகவே தெரியும். அதனாலேயோ என்னவோ தீர்க்கமாக நான் என் புருஷன் வாழ்ந்த இடத்தில் தான் வாழ்வேன் என்று சொல்லிவிட்டாள்.

காரியம் முடிந்து அனைவரும் திரும்பிய பிறகு கிட்டத்தட்ட இந்த பத்து வருடங்களில் முழுதாய் பத்து முறை கூட அனைவரும் சேர்ந்து வந்து அலமேலு ஆச்சியை பார்த்தது கிடையாது.

கடமைக்கு ஒரு பார்வை., செலவுக்கு சில பணம் என்று வந்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

இப்போது முற்றத்தில் நடக்கும் போது கால் இடறி விழுந்ததில் இடுப்பு எலும்பு முறிந்து அரசு மருத்துவமனையில் கிடக்கிறாள் அலமேலு ஆச்சி பிள்ளைகள் எல்லோருக்கும் மருத்துவமனையில் சேர்த்த பக்கத்து வீட்டு சிவநாதன், ஊர்க்காரர்கள், தகவல் சொல்லியும் இன்னும் யாரும் வரவில்லை. அலமேலு ஆச்சி வலியில் துடித்தாள். மருத்துவர்கள் ஆரம்ப நிலை சிகிச்சை அளித்தனர்.

அந்தி நேரம் நெருங்கும் வேளையில் ஒவ்வொருவராய் வரத் தொடங்கினார்கள். மூத்த மகன் சிதம்பரம் வந்தான்.,

“என்னம்மா நீங்க பார்த்து நடக்க மாட்டீங்களா., வயசான காலத்துல ஒரே இடத்தில இருங்கன்னு சொன்னா கேக்குறீங்களா” என்றான்.

இரண்டாவது மகன் வரதன்

“எங்க வீட்டுக்கு வந்து இருன்னு கூப்பிட்டதுக்கும் வரலைன்னு சொல்லிட்ட., வேற நான் என்ன தான் பண்ணுறது” என்றான்.

மூன்றாவது மகள் வள்ளியம்மை

“டாக்டர் என்னமா சொன்னாங்க இனிமே நடக்கவே முடியாதாமா” என்றாள்.

நான்காவது மகள் அழகம்மை “ரொம்ப வயசாயிடுச்சும்மா உன்னை முதியோர் இல்லத்தில சேர்த்துடுறோம் அங்க உன்னை நல்லா பாத்துப்பாங்க. உன் வயசு ஆளுங்க கூடயும் நல்லா பழகலாம்” என்றாள்.

அலமேலு ஆச்சி யார் என்ன பேசினாலும் எதுவும் பேசாமல் மௌனமாகவே இருந்தாள். எலும்பு உடைந்த வலியோடு

மனவலியும் சேர்ந்து அவள் கண்களில் கண்ணீராய் வழிந்தது.

மருத்துவர் வந்தார் எல்லோரையும் பார்த்து

“இவங்களுக்கு இடுப்பு எலும்பு உடைஞ்சு இருக்கு அவங்களுக்கு ஆபரேசன் செஞ்சா அவங்க உடம்பு தாங்காது. இனிமே அவங்களால நடக்க முடியாது. படுக்கையிலேயே தான் மீதி இருக்குற காலம் எல்லாம்”

என்றதும் எல்லோருக்கும் பகீரென்றது.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணங்களை அடுக்கி அலமேலு ஆச்சியை தங்களோடு அழைத்து செல்வதற்கு யோசித்தார்கள். அவர்கள் பேசுவதை எல்லாம் கேட்ட அலமேலு ஆச்சிக்கு தான் வெயிலில், மழையில் கஷ்டப்பட்டு இட்லிகடை., மாலை நேரத்தில் பணியாரம் சுட்டு விற்று எப்படியெல்லாமோ போராடி தன் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கிய நினைவுகளை மீட்டுக்கொண்டிருந்தாள் விழிகளில் கண்ணீர் சுரந்தது.

தீர்க்கமாய் முடிவெடுத்து எல்லோரையும் வெளியில் போகச் சொல்லிவிட்டு தன்னை மருத்துவமனையில் சேர்த்த அவள் பக்கத்து வீட்டில் வசிக்கும் சொந்தமென்று யாருமில்லாத சிவநாதனை அழைத்தாள் தனது சுறுக்கு பையில் இருந்த மொத்த பணத்தையும் சுருட்டி அவன் கையில்

திணித்து இந்த அனாதை சிறுக்கி விடியறதுக்குள்ள செத்துப்போயிடுவேன் என்ன நல்லபடியா அடக்கம் பண்ணிருயா என் ராசா. நான் செத்துப்போன தகவலை கூட வெளிய இருக்குற யாருக்கும் சொல்லிடவேக்கூடாதுன்னு அழுதுகிட்டே சொன்னாள் அலமேலு ஆச்சி.

சிவநாதனும் அழாத ஆச்சி உன் கையால சோறு சாப்பிட்டிருகேன், உன் தயவால வாழ்ந்துகிட்டு இருக்கேன். நானும் உனக்கு மகன் தான் ஆச்சி நான் உனக்கு கொள்ளி போடுவேன். அது வரைக்கும் உன்னை நான் என்னோட வீட்டில் வெச்சு பாத்துக்குவேன்னு சொன்னான்.

பசங்க எல்லோர் கிட்டயும் நீங்க போங்க உங்க குடும்பத்தை பாருங்க என்று சொல்லிவிட ஒவ்வொருவரும் கொஞ்சம் பணத்தை கொடுத்துவிட்டு நகர நினைத்தார்கள். அலமேலு ஆச்சியோ யாரிடமும் பணத்தை வாங்கவில்லை. கிழவிக்கு வீம்பை பாரு என்று

எல்லோரும் ஒருவருக்கொருவர் சொல்லாமல் கொள்ளாமல் கலைந்து அவர்கள் வீட்டிற்கு சென்று விட்டார்கள்.

சிவநாதன் இரவு உணவு வாங்கிவருவதாய் கூறிவிட்டு வெளியே சென்றான். அலமேலு ஆச்சிக்கு எண்ணங்கள் சக்கரமாய் சுழன்றது.

நான்கு பிள்ளைகள் இருந்தும் தான் அனாதையாக இருப்பதை நினைத்து வேதனை அடைந்தாள். ஒரு தாய் எத்தனை பிள்ளைகளை வேண்டுமானாலும் வளர்த்து ஆளாக்குவாள்., எத்தனை பிள்ளைகள் இருந்தாலும் ஒரு தாயை நன்றாக கவனித்துக்கொள்ள முடியாது என்ற கலியுக உண்மையை அவள் மனம் உணரத் தொடங்கியது.

இரவு ஒன்பது மணி இருக்கும் வாங்கி வந்த உணவை சிவநாதன் அலமேலு ஆச்சிக்கு ஊட்டி விட்டான். கண்ணீர் துளிகளோடு இரண்டு இட்லிகள் சாப்பிட்டதும் போதும் என்றாள். சாப்பிட்டதும் ஆச்சிக்கு குடிக்க தண்ணீர் கொடுத்துவிட்டு, வாயை துடைத்து விட்டு படுத்துக்கொள்ளுமாறு சொன்னான். அவனும் சாப்பிட்டு வந்ததும் மருத்துவமனை வளாகத்தில் உறங்கச் சென்று விட்டான்.


ஆச்சிக்கு வலியும், பிள்ளைகளின் சுயநலமும் சேர்ந்து இதயம் கனத்தது

சிவநாதன் யார் சில முறை சில வேளை கொடுத்த உணவுக்காக மட்டுமா இவன் நம் பாரத்தை இனி சுமக்க வேண்டும்.

இத்தனை ஆண்டுகளாக யாருக்கும் தெரியாத தனக்கும், மறைந்து போன தன் கணவனுக்கும் மட்டும் தெரிந்த உண்மையை யோசித்தாள் சிவநாதன் அனாதை இல்லை கதிரேசனுக்கும் வேறு பெண்ணுக்கும் பிறந்த பிள்ளை. தாய் விபத்தில் இறந்து விட பக்கத்து வீட்டிலேயே வைத்து வளர்த்து வந்தார் கதிரேசன் அவர் மறைவிற்கு பிறகு அலமேலு ஆச்சி அவனுக்கு ஆதரவு கரம் நீட்டினாள்.

காலத்தின் கணக்கு தான் எவ்வளவு வித்தியாசமானது. தன் வயிற்றில் பெற்ற பிள்ளைகள் சிறு கவலையும் இல்லாமல் இவளை உதறி விட, யாரோ பெற்ற பிள்ளை தனக்கு கரம் கொடுப்பதை நினைத்து பெருமூச்சு விட்டாள். அவள் இத்தனைக்கால வலிகளையும், சிவநாதனை மகனாக ஏற்றுக்கொள்ளாமல் விட்டு விட்டோமோ, கணவனின் துரோகத்தால் தான் அவனை நாம் தள்ளியே வைத்து விட்டோமோ என்றெல்லாம் மனதிடம் கேள்விக் கேட்டுக்கொண்டாள். தான் பெற்ற பிள்ளைகளுக்கு கொடுக்காத உரிமையை சிவநாதனுக்கு கொடுக்க விரும்பினாள். மனதில் தன் வாழ்வின் மிச்ச பாரங்களை நினைத்து ஆழமாய் மூச்சை இழுத்துக்கொண்டாள்., அவள் சொன்னது போல அந்த இரவில் அது தான் அவள் கடைசி மூச்சு.

மறு நாள் சிவநாதன் மகனாய் எல்லா காரியங்களையும் செய்தான். சிவநாதனை மகனாக அக்னி சாட்சியாய் ஏற்றுக்கொண்டது போல சிதையில் எரிந்துகொண்டிருந்தாள் அலமேலு ஆச்சி.



# எங்கள் பள்ளிக்கூடம்

ஜெனனி. மோ

தோழமையில் தொலைந்து போன பள்ளிப் பருவ நினைவுகளை அசை போட்டபடியே மகிழுந்தில் பயணம் செய்கிறான் பிரதீபன்.

பிரதீபனின் நினைவெல்லாம் பாடாசாலையை நோக்கி ஓடியது.

உருத்திரபுரம் மாகாவித்தியாலத்தில் பிரதீப் கல்வி கற்று பதினைந்து ஆண்டுகள் கடந்து விட்டன. பள்ளியின் முதல்வர் திருமதி காஞ்சனா சிவகரன் அன்றொரு நாள் அழைப்பை ஏற்டுத்தினார்.

"வணக்கம் பிரதீபன்"

"வணக்கம் சொல்லுங்கள். நீங்கள் யார் என்று நான் அறியலாமா?" என்றான்.

"நான் உருத்திரபுரம் மகா வித்தியாலத்தின் முதல்வர் கதைக்கிறேன். உங்களுடன் இப்போது கதைக்க முடியுமா தம்பி?"

"ஓம் அதிபர் சொல்லுங்கள்"

"வருகின்ற திங்களில் பாடசாலையில் இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி சிறப்பாக நடாத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பழைய மாணவர்களைப் பிரதம விருந்தினராக அழைப்பது எங்கள் பாடசாலையின் நடைமுறை. இது உங்களுக்கு தெரியும் தானே. இம்முறை உங்களை நாங்கள் அழைக்க எண்ணியுள்ளோம்."

"ஓ அப்படியா! மிகுந்த மகிழ்ச்சி ."என்றான்.

படித்த பாடசாலைக்குப் பிரதம அதிதியாக செல்வதை எண்ணி மனம் மகிழ்ந்தான். கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றுப் பழமை வாய்ந்த உருத்திரபுரம் கிராமத்தின் பெருமைக்கு மேலும் பெருமை சேர்க்க, இயற்கை எழிலோடு உருத்திரபுரம் மகாவித்தியாலயம் அமைந்துள்ளது,

ஆயிரத்தது தொள்ளாயிரத்து ஐம்பதாம் ஆண்டு, நாற்பது மாணவர்களுடன் தொடங்கிய பள்ளி இன்றுவரை பல பெரும் புலமையாளர்களை உருவாக்கியுள்ளது. அதனால் தான் வைத்திய கலாநிதியாகிய என்னையும் அவர்கள் விருந்தினராக அழைத்து கௌரவிக்கிறார்கள்.

பாடசாலைக்குள் நுழைந்தான். இசை வாத்தியங்கள் முழங்க மாலைகள் அணிவிக்கப்பட்டு மைதானத்தில் இருந்த மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டேன்.

மைதானம் மாணவர்களின் உற்சாகக் குரல்களால் நிறைந்திருந்தது. ஒவ்வொரு இல்லமும் தங்களது இல்லக் கொடியை உயர்த்திப் பிடித்தபடி, தங்களது அணி வீரர்களை உற்சாகப்படுத்தினர். ஓட்டப் பந்தயம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல் எனப் பல போட்டிகள் நடைபெற்றன.

இல்ல மெய்வல்லுனர் போட்டிகளை நன்றாக இரசித்த வண்ணம் இருந்தேன். போட்டிகள் நிறைவு பெற்று பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது விருந்தினரை உரையாற்ற அழைத்தனர்.

"ஒழுக்கம், விழுப்பம் தரும்" என்பதே எங்கள் பள்ளியின் தாரக மந்திரம். எங்கள் பள்ளி, உடற்கல்விக்கு முக்கியத்துவம் தந்து, விளையாட்டுத் துறையில் பிரகாசிக்க எங்களை ஊக்கப்படுத்தியது. காற்பந்து, வலைபந்து, என அனைத்து விளையாட்டுகளிலும் நாளைய உலக சாதனையாளர்களை உருவாக்குவதில் எங்கள் பள்ளி முனைப்புடன் செயற்பட்டது. இன்றுவரை பல சாதனைகளை நிலை நாட்டியுள்ளது. இப்போது கபடியில் தேசியம் வரை செல்கிறது. கபடியில் தேசியம் சென்ற மாணவர்களுக்கு பராட்டுக்கள்.

ஆசிரியர்களும் நாங்களும் நண்பர்களாக கலகலப்புடன் கலந்துரையாடி மகிழ்ந்து எளிமையாகப் பாடங்களைக் கற்றோம். நன்றாகப் பாடங்களை எமது ஆசிரியர்கள் நடத்துவார்கள். என்னைப் போன்று பலர் இப்பாடசாலையில் கல்வி கற்று பொறியியலார் , எழுதுவினைஞர், மருத்துவர் என்று பல தொழில்களில் உயர்ந்தவர்களாக உள்ளனர். இப்போது நினைக்கும் போது எல்லா நிகழ்வுகளும் மனக்கண் முன் வந்து செல்கிறது.

விளையாட்டில் தோல்வியடைந்த மாணவர்கள், தங்கள் தோல்வியிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, அடுத்த வருட போட்டியில் வெற்றி பெற வேண்டும்.

இப்போட்டியில், மாணவர்கள், தங்கள் திறமைகளை வெளிப்படுத்தியமை மகிழ்ச்சி அளிக்கிறது.

என்னை அழைத்தமைக்காக பள்ளி சமூகத்திற்கு நன்றிகள். எனது பாடசாலைக்காக பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்த மாணவர்களுக்கு மடிக்கணினி பெற்று தருகிறேன் என்றான்.


எல்லோரும் சத்தமாக கை தட்டினார்கள்.

பழைய நட்புகளை சந்திக்கும் தருணம் மிக நேசிக்க கூடியது. அந்த ஒரு தருணத்தில் தான் இன்று நான். எனது பள்ளி பருவத்தில் இருந்த நட்புகளை சந்திக்க இல்ல மெய்வல்லுனர் போட்டி உதவியது.

மகிழ்வுடன் வீடு திரும்பினேன். பள்ளி நினைவுகள் என்றும் மறக்க முடியாது என்று எண்ணிய போது "மீண்டும் பள்ளிக்குப் போகலாம் நம்மை நாம் அங்கு காணலாம்...." என்ற பாடல் வானொலியில் ஒலித்துக் கொண்டிருந்தது.

சேஹு மொஹம்மது பெனாஸிரா,
முஸ்லிம் ஹல்மில்லாவ.

# ஒற்றைப் புன்னகை



புன்னகைவார்த்தைப் புயலுக்குள்
கசக்கி எறியப்பட்ட
காகிதச் சுருளாய்

ஓர் ஓரத்தில் பாதங்களுக்குக்
கீழே நொறுங்கும்
வதைகளின் மறுபிறப்பில்

கண்களைக் கசக்கிக் கொண்டு
மண் பிடிக்குள்ளால்
ஓர விழி கொண்டு
உற்றுப் பார்க்கையில்

முதுகின் மேல் பொதி
சுமக்கும் கழுதையின்
நாக்கு வெளியே தள்ளப்பட்டு
கண்கள் பிதுங்கும்
பாரங்கள் உடலுக்கு
மட்டுமல்ல ஆன்மாவுக்கும் தான்..

புத்தகப் பையோடு அதிகாலை
விடியலுக்கு முகமன் கூறிக்
கொண்டு விறுவிறுப்பாய் நடந்து
கொள்கையில்

தராசு போல் ஒரு பக்கமாய்ச்
சாய்ந்து கொள்கிறது உடலுக்குள்
உள்ளே ஒரு சதைப் பிண்டம்

அதிகாலைத் தென்றல் வருடும்
சுகமான பொழுதுகள் கூட
அதற்குத் தெரிவதில்லை...

நதியாய் ஓடும் வாழ்க்கைப் பயணத்தில்
ஆயிரம் முகங்களுக்கு முகமன்
கூற எத்தனையைத் தான்
முக்காடிட்டுக் கொள்ள

என்று புலம்பிக் கொண்டே
அத்தனை பேரையும் ஒற்றைப்
புன்னகை சமாளித்து வழி அனுப்புகிறது...

குமுளன்

# கடலலையே

ஊச்சஞல் போல மேலும் கீழும் கடலலையே -நீ
ஆடி ஓடி வந்து போவாய் கடலலையே

நீல வண்ணம் கொண்டு நிற்கும் பெருங்கடலே - இங்கே
நீல வானைக் குடையாய்க் கொண்ட திரை கடலே

தொட்டு நோண்டி அனைவருக்கும் கடலலையே – நீ
தொட்டுப் பாதம் கழுவிச் செல்வாய் கடலலையே

உப்புத் தந்து உணவளிக்கும் திரைகடலே – நாம்
தப்பு என்ன செய்துவிட்டோம் திரைகடலே

உந்தன் மீனைப் பிடித்ததற்கோ குரைகடலே
எந்தன்; இனத்தை அழித்துவிட்டாய் திரைகடலே

பந்தமெனப் பாசம் கொண்டோம் அலைகடலே - நீ
குந்தமெனக் குடிகெடுத்தாய் ஆழ்கடலே

வீறுகொண்டு எழுந்து வந்தாய் கடலலையே – எம்மைக்
கூறுகொண்டு செல்வதற்கோ கடலலையே

பேறு என்று நாம் கொண்டோம் திரைகடலே – உந்தன்
வேறு குணம் நாம் அறியோம் கடலலையே

கரையில் மண்ணைச் சேர்த்து நிற்கும் கடலலையே
விரைந்து கடந்து சென்றதேனோ கடலலையே

உயரலைகள் உன் அழகே ஆழ்கடலே – நீ
உயரவந்து உறுத்தியதேன் நீழ்கடலே

பூம் புகாரரில் பொறாமை கொண்டோ கடலலையே
எம் புகழைக் கொள்ளை கொண்டதுமேன் சூழ் கடலே


ஏழ் கடலாய் இணைந் திருக்கும் நீழ் கடலே – நீ
ஏழ்மை எமக்குத் தந்துவிட்டாய் ஆழ் கடலே

பரந்த உந்தன் அளவு போலக் கருங்கடலே – நாம்
பரந்த எண்ணம் கொண்டு விட்டோம் கருங்கடலே

காவு கொண்ட எம்மினத்தைக் கருங்கடலே
மேவிக் காத்து வந்திடுவோம் கருங்கடலே

சிதைவு பட்ட எந்தன் உறவு பெருங்கடலே
வதை பட விடமாட்டோம் உறுங்கடலே

அன்புக் கரம் நீட்டி நாங்கள் கருங்கடலே – ஒருமனதாய்
தென்பு கொள்ள வைத்திடுவோம் பெருங்கடலே





# பேசாத மௌனம்

சந்திரா மனோகரன்

வீட்டு முற்றத்தில் வின்னி சைக்கிளுக்கு ஸ்டாண்ட் போட்டுக் கொண்டிருந்தான்

'ஏப்பா ...என்னாச்சு ?'' ஒருவிதமான ஆதுரத்துடன் கேட்டார் விசுவாசம்.

"ஒண்ணும் தெரியலேப்பா... பிரவுசிங் சென்டரில் கேட்டேன்... வரலையாம்.... பியூட்டி பார்லர்லே விசாரிச்சேன்...அந்த ரூபா மேடம் 'தெரியாது' ன்னுடாங்க... அப்புறம்..."

பேச்சு சத்தம் கேட்டு மெர்லின் வெளியே ஓடி வந்தாள்.

"அக்காவுக்கு என்ன ஆச்சு?"

வின்னி உதட்டைப் பிதுக்கினான்.

"ஏம்மா போன் பண்ணி பாத்தியா? " என்றார் விசுவாசம். "எத்தனை தடவை பண்றது...சுவிட்ச் ஆப்னு வருது .." என்றாள்

மெர்லின்.

" சர்ச் பக்கம் போனியா?"

"போனேன்... அங்கே பிரேயருக்கு போயிருப்பாளோன்னு உள்ளே போய் பார்த்தேன்... கொஞ்சம் பேரு முக்காடு போட்டுகிட்டு பிரேயர்லே இருந்தாங்க .. சாராவை அங்க காணல ...பாஸ்டர் கிட்டேயும் கேட்டேன்"

"இதுக்கு போய் அலட்டிக்கிறீங்க... அவ என்ன சின்ன பொண்ணா கம்பெனியில் ஓவர் டைம் வேலை ஏதாச்சும் இருக்கும் ..இந்த காலத்துல கேர்ள்ஸ் எல்லாம் சாவகாசமா நைட்டு பன்னிரண்டு மணிக்கு கூட வராங்க... உங்க அப்பாவையும் அம்மாவையும் அமைதியா இருக்க சொல்லு... மெர்லின் எப்படி இருக்கான்னு

விசாரிச்சாரு ... நல்லா இருக்கா பாஸ்டர்... எக்ஸாமுக்கு படிச்சிட்டு இருக்கான்னு சொன்னேன் " என்றான் வின்னி.

"இனி என்ன பண்ணலாம் ..?" என்றவாறு வாஷ்பேஷனில் முகம் கை அலம்பினான்.

"அப்பா... ஒன்பதே முக்கால் மணி பஸ் வந்துட்டு போயிடுச்சான்னு பாத்தீங்களா?" .

"பஸ் ஸ்டாப்புக்கு போய் பார்த்தேன்.. அதுல வரல"

"சரி... லாஸ்ட் பஸ் பத்தரைக்கு ...அதுல கண்டிப்பா வந்துருவா பாருங்க "என்றான் வின்னி .

" அதிலேயும் வரலேன்னா ..?" என்றார் விசுவாசம்.

"நேரா கம்பெனிக்கு போயிட வேண்டியதுதான் " என்றான் வின்னி தோசையைப் பிட்டுப் பிட்டு தேங்காய் சட்னியில் தோய்த்து வாயில போட்டவாறு.

மைக்கேல் வீதியில் மையிருட்டு படிந்திருந்தது. ஆங்காங்கே மினிக்கிடும் தெரு விளக்குகள். சில வீடுகளில் ஹால் விளக்குகள் மட்டும் ஒளிர்ந்து கொண்டிருந்தன. விசுவாசம் வீடு ஒன்றுதான் ஒளிக்கோலமாய் காட்சியளித்தது.

*இரவு மணி 10:40*

வாசல் கிரில் கேட் கிரீச்சிடும் ஒலி. சாரா சாவதானமாக, இயல்பாக காலணிகளை கழட்டி விட்டு உள்ளே நுழைந்தாள். நேராக பாத்ரூம் சென்று 'காக்கா குளியல்' போட்டு விட்டு ... நிதானமாக நைட்டிக்குள் நுழைந்து... அம்மா சுட்டு வைத்திருந்த மூன்று தோசைகளை கோழி மாதிரி அபக் அபக்'கென்று விழுங்கி விட்டு... கையில் ஒரு புத்தகத்தைத் தாங்கியபடி படுக்கையில் சாய்வாகப் படுத்தவாறு பக்கங்களைப் புரட்டினாள். சிறிது நேரத்தில் விளக்கை அணைத்துவிட்டு உறங்கிப் போனாள்.

அவள் உள்ளே நுழைந்தது முதல் படுக்கையில் விழுந்த வரை யாரிடமும் பேசவில்லை.

அதிர்ந்து போன குடும்ப நபர்களில் ஒருவருக்காவது அவளிடம் 'ஏன்?எதற்கு? எங்கே? எப்படி?' என்று கேட்பதற்குத் துணிவு, துளி கூட இல்லை.

ரிட்டயர் ஆன அப்பா... ஏதோ பேருக்கு ஓய்வூதியம்... அம்மா ஹோம் மேக்கர் ...தம்பி வின்னி வேலையில்லா பட்டதாரி.. மெர்லின் குழந்தை சுபாவம்.. வயது முதிர்ந்த தாத்தா தனி அறையில் இருமலுடன் போராடிக்கொண்டு ...

இப்படி ஓர் அசாத்திய மௌனத்திற்கு என்ன காரணம் ?

சாரா என்கிற அந்த இளம் பெண்ணின் சாப்ட்வேர் சம்பாத்தியத்தில்தான் அந்தப் பெரிய நடுத்தர குடும்பம் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது.

# ரா.சண்முகவள்ளி
# ஸ்ரீனிவாசன் கவிதைகள்

**சிவப்பு ரேகை**

இலட்சுமண ரேகையை
கடந்த சீதைகளால்
சிவப்பு ரேகையை
கடக்க முடியவில்லை

கழிவிரக்கத்தின்
வீரியத்தில்
கட்டுண்ட அவர்களுக்கு

மாதத்தின் மூன்றுநாட்கள்
என்பது கடக்க முடியா
ரேகையாக காட்சியளிக்கிறது

❍

**அவன் செயல்**

படைத்தவனே
உடைக்கின்றான்
வாழ்வெனும்
வண்ணக்குமிழிக்குள்
அடைபட்ட காற்றாக நாம்

பறத்தலோ
உடைபடுதலோ
எதுவும் நம்வசம் இல்லை

❍



### மகிழ்ச்சியும் விலை மலிவே

மகிழ்ச்சிக்கான செலவென்பது
கிழிந்த காகிதத்தில்
பிறக்கும் கப்பலைப்போல்
சிக்கனமானது தான்

இலகுவானதை
அப்படியே ஏற்றுக்கொள்ளும்
மனமில்லாத நாம் தான்
அரிதாரம் பூசி
அழகென்றபெயரில்
கடன்அட்டைக்குள்
புதைத்துவிடுகிறோம்
மகிழ்ச்சியை

❍

### வெளியேறுகிறது

யுத்த பூமியின்
கலவரச்சத்தத்தில்
சத்தமில்லாமல்
வெளியேறுகின்றன
சமாதான புறாக்கள்
பிழைத்தோடும்
திசையறியாது
மாண்டுபோகும்
பிஞ்சுகளின்
மரண ஓலங்களில்
மனிதம் மாண்டுவிட்டதை
கானச்சகியாதவை

கடல்கடக்கின்றன
அமைதிக்கான
உடன்படிக்கையை தேடி

❍

### நம்பிக்கை துளிர்

சில தோல்விகளுக்கே
துவண்டு விழுகிறேன்
இன்னல்கள் எல்லாம்
எனக்கு மட்டும் தானோ
என்று புலம்பித்திரிகிறேன்
விரிசலில் வளர்ந்த
வீட்டுச்செடியோ
சத்தமில்லாமல் மலர்ந்துவிட்டது

❍

### சாயல்

கூர் தீட்டிய
பென்சில் முனையில்
பிறந்த பறவையொன்று
தான் வாழ்ந்த மரத்தின்
சாயலைக் கண்டது
தன்னை வரைந்த
பென்சிலில்

❍

### பிரிவும் இயல்பே

கிளையை விட்டு
இலை பிரிவதும்
பறவைகள் தங்களின்
இறகை பிரிவதும்
இயல்பாகிறது
மனிதர்கள் தான்
தங்கள் பிரிவை
துயறென்று
கொண்டாடித் தீர்க்கின்றனர்

❍

### வாசிப்பு

அவளுக்காக என்று
எழுதிய காதல் கவிதைகள்
எல்லாவற்றையும்
எனக்காக நீ எழுதியதாகவே
எண்ணி வாசிக்கிறேன் நான்

உனக்காக நான் எழுதிய
காதல் கவிதைகளை
யார்யாரோ வாசிக்கின்றனர்

கவிஜி


## சுற்றுலா பொட்டலங்கள்

வானத்தில்
ஏதுமில்லை என்றா
மேல் நோக்க மறுக்கிறார்கள்
தூரங்கள்
தோன்றவில்லை என்றா
தோகை விரிக்க வெறுக்கிறார்கள்
வெற்றுக் கண்களை
மூடிக்கொண்டு
பட்டன் கண்களைத் திறக்கும்
பரிதாபங்கள்
கூட்டத்தில்
தனியொருவனைக்
காணவில்லை
தனித் தனி கூட்டங்களில்
அலைபேசிகளே முகங்கள்
இரு விழிகளில்
தோரணைகள் காணா இன்பம்
ஒற்றைப் பொத்தானில்
நெற்றி திறக்கின்றது
அழிந்து போகும் அத்தனையும்
திறன்களில் கொள்கிறார்கள்
அழியாத ஒரே ஒரு
நினைவையாவது
கண்களில் கொள்வார்களா
சுற்றுலா பொட்டலங்கள்

புதுகை ஆதீரா

## நித்தியம்

நித்தியம் என்னை
புலரி முதல்
யாமம்வரை
இழுத்துச் செல்கிறது
அதன் இறுக்கிய
பிடிகளுக்குள்
ஏதுமறியாமல்
துவங்கிடும் குறும்
பயணம்
நித்தியத்தின்
அவசரம்
கண்களுக்கு லாடமும்
கால்களுக்குச் சக்கரமும்
தலைக்கு கிரீடமுமாக
பரிசாகிறது நித்தமும்
வாதா மரத்தில்
கிளியொன்றின்
கிரீச்சொலி
கிரீடம் மறைத்த
தடைகள் மீறி
செவிப்பறை மோதி
மடைமாற்றப் பார்க்கிறது
நிமிர்ந்த பொழுது
பால்யத்தின்
நினைவுகள்
மரத்தில் தொங்கிக்
கொண்டிருக்கிறது
மரநிழலில்
சற்று இளைப்பாற
நினைக்கும் மனதைக்
கரம் பற்றி
இழுக்கும் நித்தியத்தை தவிர்க்க முடியாது
தவிக்கிறது மனம்
கிட்டிய
பொழுதொன்றில்
கிளியின் மொழியே
நித்தியத்தின் கவிதையாகிறது.



ரகுநாத் வ, மதுரை

## உறுத்தல்

யானையும் பூனையும்
சம அளவிலிருக்கின்றன
பொம்மை கடையில்

கொழுத்த மீனின்
அருகிலேயே நிற்கிறது
வாடிய நாரை

வாங்கச் சொல்லி உறுத்துகிறது
இதய வடிவ லவ் பேர்ட்ஸ்

நெகிழிப்பை நிறைய
அஃறிணைகள்

அடுத்ததாக கசாப்புக்கடை
செல்ல வேண்டுமென்பதுதான் உறுத்துகிறது.

கனகசபாபதி செல்வநேசன்(அல்வாய்)

## அதோ அந்த மழைத்துளி....!

அதோ
அந்த மழைத்துளி
மீட்டு வரும் மண்வாசம்
என்னை ஆட்கொள்கையில்
நான் இறந்து போகிறேன்!
என் சுவடுகளைப்
பயங்கரவாதம் என்றெழுது
என் சிதிலம் எடுத்து
உன் அங்கம் புணர்...
என் கண்கள் எடுத்து
குத்தி விளையாடு...
என் நிர்வாணம் படமெடுத்து
குடும்பத்துடன் பார்த்து ரசி...
துரோகங்கள் உடனிருந்து
துதிபாடும் உன்னை!
காசு வாங்கிய நீதிபதிகள்
உன்னை நியாயப்படுத்துகின்ற தருணத்திலும்
தாய்நிலத்தில் விதையாகும்
என்னுயிர்!
அப்போது
உன் கர்வம் களனி ஆற்றில்
அடித்துச் செல்லப்படும்!

அதன்பின்
என்னைத் தெரிந்துகொள்ளும்
தேவையிருந்தால்
அந்த
மழைத்துளியிடம் கேட்டுத்
தெரிந்துகொள்.

## மு. பிரபு, வேலூர்

குடிசையின் ஓட்டைகள் வழியே /
பாத்திரங்கள் நிரம்பிவிட்டன/
இரவெல்லாம் மழை.

❍

மழைக்குமழை பராமரிப்பு பணிகள்
உடனே தொடக்கம்/
ஓலை குடிசை.

❍

சாலை விபத்தில் அதிகாலையில்
சிதறிக்கிடக்கும் தவளைகள்/
இரவெல்லாம் மழை.

❍

இரவெல்லாம் மழை
அதிகாலையில் இன்னிசைக் கச்சேரி
குளத்து தவளைகள்.

❍

அடித்துப்போனது
கால்வாய் நாற்றம் /
இரவெல்லாம் மழை.

---

## ச. இராஜ்குமார்

காற்றில் களையும் மகளின்
கூந்தலை சீப்பெடுத்து சரிசெய்கிறார் அப்பா .
நிற்காமல்
ஓடிக்கொண்டிருக்கிறது தொடர்வண்டி..

இளையவன் சிவா

# கதை கேட்ட காதுகள்

பந்தங்களின் பங்களிப்பில் பாசமும் நேசமும்
பரிமாறிய காலத்தில் நேரமும் நிம்மதியும்
நிரம்பியிருந்து மனிதத்தை வளர்த்தியது.
அன்பாலும் அறத்தாலும் வளரும் பிள்ளைக்கு
அனுதினமும் அனுபவத்தை கதையாக்கி
நெறிமுறைகளை நினைவில் வைத்த
தாத்தாவும் பாட்டியும்
கதைகளில் வாழ்கின்றனர்.
இல்லத்தில் இருந்தாலும் உலகத்தின் ஓவியத்தை
எல்லோர்க்கும் காட்டிவிட்ட கதைக்குள்ளே
விட்டுக்கொடுத்தலும் பொறுத்துக்கொள்ளுதலும்
மன்னிப்பும் மறப்பும் என
கற்றுக்கொண்டவை ஏராளம்.
எதிர்வீடும் அடுத்தவீடும்
எதிரியாகிப்போன இன்றைப்போலல்லாமல்
எப்போதும் எமைத் தாங்கி
தம்பிள்ளையெனத் தாலாட்டியதும்
பேரன்பின் வழிதானே.
ஆத்திச்சூடியும் மூதுரையும்
ஆன்றதொரு திருக்குறளும்
கேட்கின்ற செவிக்குள்ளே
நாள்தோறும் விழுகின்ற கதையெல்லாம்
நாணயத்தை வளர்த்தெடுக்க
நம்பிக்கையாய் வாழ்வை அணுக
தம்மைப் போல பிறரை எண்ண
எவ்வுயிரும் இன்புற்றிருக்கவென
காட்டியவை ஏராளம்.
உறவுமுறை மாறாமல்
ஒன்றிணைந்த கூட்டுக்குடித்தனத்தில்
சகிப்புத்தன்மை உயர்ந்தோங்கி
சந்ததியை வளர்த்தெடுக்க
எவரிடத்தும் முளைத்திடாது
வன்முறையும் பழியெடுத்தலும்.
கதை கேட்ட காதுகளின் சரித்திரத்தில்
கடைசிவரை ஒலித்துக் கிடக்கின்றன
கருணையின் மணியோசையும்
அன்பின் மௌனப்பேச்சும்.




# இந்து சமயத்தினரின் 16 சடங்குகள்

இரா.சீ .பாலகுமார்.M.A

இந்து சமயத்தினர் பிறப்பு முதல் இறப்பு வரை செய்ய வேண்டிய 16 சடங்குகள் குறித்து கல்ப சூத்திரங்கள் மற்றும் தர்ம சாத்திரங்களில் குறித்துள்ளது. இந்த சடங்குகளில் பல புரோகிதரைக் கொண்டு செய்ய வேண்டும். சடங்குகளின் விவரம் பின்வருமாறு[1][2]:

- கர்ப்பதானம் - முதலிரவு அல்லது சாந்தி முகூர்த்தம்
- பும்சவனம் - கர்ப்பவதிக்கு 3 அல்லது 4ம் மாதத்தில் செய்ய வேண்டியது.
- சீமந்தம் - கர்ப்பவதிக்கு 5 அல்லது 7ம் மாதத்தில் செய்ய வேண்டியது.
- ஜாதகர்மா - பிறந்த குழந்தையின் தொப்புள் கொடி நீக்கும் சடங்கு
- பெயர் சூட்டுதல் - குழந்தைக்கு நாமகரணம் செய்தல்
- நிஷ்கிரமானம் - குழந்தையை முதன்முதலாக வெளியுலகிற்கு அழைத்துச் செல்லுதல்
- அன்னப்பிரசன்னம் - குழந்தைக்கு முதன்முதலாக சாதம் ஊட்டுதல்
- முடி காணிக்கை - குழந்தைக்கு முதல் மொட்டை போடுதல்
- காதணி விழா - குழந்தைக்கு முதன்முதலாக காது குத்துதல்
- வித்தியாரம்பம் - குழந்தையை நெல் மணி தட்டில் ஓம் என எழுத வைத்தல்.
- உபநயனம் - குழந்தைக்கு முப்புரி நூல் அணிவித்தல்
- வேதாரம்பம் - குருவிடம் வேதங்கள் அல்லது போர்க் கலையை கற்க அனுப்புதல்
- மீசை மழித்தல் - இளைஞர்களின் மீசை & தாடியை மழிக்கும் சடங்கு
- கல்வி முடிக்கும் சடங்கு - குருவுக்கு குரு தட்சணை வழங்குதல்
- திருமணம் - ஆண்-பெண்களுக்கு திருமணம் செய்துவைத்தல்
- இறுதிச் சடங்கு - இறப்புச் சடங்கு.

நன்றி:-https://ta.wikipedia.org/s/cf2h




# “மஞ்சள் மாம்பூ”

எழில் கொஞ்சும் கிழக்கு மாகாணத்தின் மீன் பாடும் தேனாடாம் மட்டக்களப்பு மாவட்டத்தின் வங்காள விரிகுடாவும் வாவிக்கரையும் கொண்ட ஏறூரில் பிறந்த கவிஞர், வைத்திய அதிகாரி டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்கள் எழுதி வெளியிட்ட ‘‘மஞ்சள் மாம்பூ’’ ஹைக்கூ தொகுதி என் கரம் சேர்ந்தது. வைத்தியத் துறையில் இருந்து கொண்டு கவிதை எழுதுவதென்பது மிகவும் கடினமான காரியம். அதையும் மீறி கவிஞர் ஜலீலா இலக்கியத்துறையில் பிரகாசிப்பது சாதனைதான். செறிவான பொருளடக்கம் கொண்டதாக இவரது தொகுதி தெரிகிறது.

சின்னதாக இருக்கும் பெரிய அற்புதம் என்று ஹைக்கூவைப் பற்றி யாவரும் சொல்வார்கள். ஆம், பிரமாண்டாமான ஒரு விடயத்தை ஹைக்கூவில் மிக எளிதாகவும் சிக்கனமான வார்த்தைகளிலும் கூறிவிடலாம். இன்று உலக அளவில் ஒரு கவிதை வடிவம் தனித்து எழுந்து நிற்கிறது என்றால் அது ஹைக்கூ வடிவமாக மட்டும்தான் இருக்கும். இந்தப் பின்னணியில் டாக்டர் கவிஞர் ஜலீலா அவர்களின் ஹைக்கூ களும் மிகுந்த அவதானிப்பைக் கொண்டிருக்கின்றன. ஜலீலாவின் ஹைக்கூகள் தமிழில் மட்டுமல்லாது ஆங்கில மொழியிலும் கூர்மை பெற்றிருக்கின்றன. ஒரு பட்டாம்பூச்சியும் சில ஹைக்கூக்களும் என்ற உலகளவிலான இணையத்தில் அவரின் ஆங்கில மொழி பெயர்ப்புக் கவிதைகள் வெளிவருவது அதற்குச் சான்றிறுக்கிறது.

கவிஞரின் ஹைக்கூக்களை வாசிக்கின்ற போது மனது

இயற்கையின் பால் ஈர்க்கப்பட்டுச் செல்கிறது. தனக்கென ஒரு தனித்துவத்தை அவர் பேணுவது மிகுந்த அழகு.

“மென்னிருட்டு //
நதியோரம் படர்கையில் // இசைக்கும் சில் வண்டு “

என்ற துளிப்பாவில் இயற்கையின் படைப்புக்கு ஆத்மா கொடுக்கிறார். இராக் கவிகின்ற நேரத்தை ஜீவனூட்டி சொற்களில் வடித்திருக்கிறார்.

இன்னொரு இடத்தில்

“கையில் அலை பேசி //
விலை போகிறது //
ஆழ்ந்த உறக்கம்”

என்று நிகழ்கால எதார்த்தத்தை படம் பிடிக்கிறார். உண்மையில் கவிஞரின் உணர்வு, கற்பனை என்பன நிகழ் காலத்தைப் பிரதி பலிப்பது கவிதையை உயிரோட்டமாக்குகிறது.

தூறல் மழையில் நனையும் போது உள்ளத்தில் உருவாகும் இன்ப மயக்கம் ஜலீலாவின் ஹைக்கூக்களை வாசிக்கையிலும் உண்டாகிறது.

ஜப்பானிய ஹைக்கூ கவிஞர்களின் இயற்கை மீதுள்ள பிடிப்பை நமது கவிஞரும் தனது கவிதைகளில் பதிந்திருக்கிறார். உதாரணத்திற்கு

“நதி சேருங்கடல் //
இழுத்துக் கொள்ளும் //
சூரியன் “

என்ற கவிதையில் இயல்பு நிலையில் அவர் இயற்கையைக் கண்ணுவது ரசனைக்குரியது. இப்படி பல்வேறு கவிதைகளில் ஹைக்கூ கவிஞர் ஜலீலா நமது மனங்களில் தனது சிந்தனைகள் மூலம் நீங்காத இடத்தைப் பிடித்து விடுகிறார். உலக அளவில் ஹைக்கூ கவிதைகள் பல ஆண்டுகளாக எழுதப்பட்டு வந்தாலும் தமிழில் 1980 ஆண்டில்தான் முதலாவது ஹைக்கூ தொகுதி வந்தது. கவிஞர் அமுதபாரதி அவர்கள் அதற்கு சொந்தக்காரர். இப்போது பரவலாக இலங்கையிலும் ஹைக்கூ நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அந்த வகையில் கவிஞர் ஜலீலாவின் “ மஞ்சள் மாம்பூ “ தொகுதியும் பெரியதொரு அடையாளத்தைப் பெறுகிறது.

இதற்கு அப்பால் கவிஞர் டாக்டர் ஜலீலாவின் இன்னும் ஒரு ஹைக்கூ கவிதையைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். தமிழ் நாட்டின் பழம்பெரும் இதழான மகாகவி இதழில் இடம்பெற்ற அந்த ஹைக்கூ கவிதை மனதில் நீங்காத இடத்தை பிடித்து விட்டிருப்பதை மறுக்க முடியாது.

அக்கவிதை இத்தொகுதியில் இடம் பெறாவிட்டாலும் அவரது ஆளுமையைப் பறைசாற்றி நிற்பதைக் காணலாம்.

“கற்கும் வகுப்பறை /
எந்தப் பேனா /
ஸ்டெதெஸ்கேப் ஆகும் ?/”

ஜலீலா என்ற பேனா
“ஸ்டெதெஸ்கோப்”
ஆகிவிட்டதை எண்ணி மனதில் உவகை ஏற்படுகிறது.

நான் இரசித்த இன்னும் சில கவிதைகளை உங்களின் பார்வைக்கு தருகிறேன்.

ஏழையின் வீட்டில்/
பஞ்சமே இல்லை/
பஞ்சத்திற்கு/

சந்தை இரைச்சல்/
அமைதியாக உறங்கும்/
பூக்காரி மடியில் குழந்தை/


இவ்விரண்டு ஹைக்கூ கவிதைகளிலும் ஏழ்மையின் உச்சத்தை மிக லாவகமாக சப்தமின்றி நம் முன்னே கொண்டு வந்து விடுகிறார் கவிஞர் டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்கள். வாசிக்கும் போதே என்னை ஒரு ஆழ்ரசிகனாய் ஈர்த்துக் கொண்டது, கவிஞர் ஜலீலாவின் “மஞ்சள் மாம்பூ” ஹைக்கூ நூல் என்று கூறினால் அது மிகையில்லை.

கற்பனைகள் இல்லாமல் ஹைக்கூவுக்குரிய யதார்த்ததை மட்டும் இவர் முறையாக கடைப்பிடித்திருப்பது இத்தொகுதியின் சிறப்பம்சமாகும். சென்றியு வகைமைகளையும் சிறப்பாகக் கையாண்டிருக்கிறார். கவிஞர் மேலும் பல தொகுப்புகளைத் தரவேண்டும் என்று அன்போடு வாழ்த்துகிறேன்.

கவிச்சுடர் காத்தான்குடி எம்.எம்.ஜுனைதீன்.

நூல் வெளியீடு -
நூலேணி பதிப்பகம்
சென்னை, தமிழ்நாடு
முதற்பதிப்பு 2024

நூல் வடிமைப்பு -
கன்னிக்கோவில் ராஜா சென்னை
பக்கங்கள் 128




## யுகசேனன்

தூரத்தில் கேட்கிறது
ஒரு நாயின்
துயரக் குரல்.
அது
தன் மீது கவிந்திருக்கும்
இரவைக் கண்டு மிரள்கிறது.
இரவின் நிறம்
கறுப்பு என்று
தப்பாகத் தெரிந்து வைத்திருக்கிறது.
எப்படிப்
புரிய வைப்பேன் அதற்கு
இரவின் நிறம்
வெள்ளை என்பதை.

## ஜெயதேவன்

எல்லோரும் ஊருக்குப் போய்க் கொண்டிருக்கிறோம்
ஊர் தூரமாய் இருக்கிறது
ஊர் அருகாமையிலும் இருக்கிறது.
தட்டு முட்டுச் சாமான்கள் ,மூட்டை முடிச்சுகள்
தயாராகி விட்டன.
மரச் சட்டகங்கள் எங்கோ நமக்காக
தயாராகின்றன.
அநேகம் எல்லா பறவைகளோடும்
பேசி விட்டோம்
தாவரங்களுக்கும் செய்தி சொல்லி விட்டோம்.
பிரியா விடைக்கு அடையாளமாய்
சில கண்ணீர்த் துளிகள்
வந்த பாதையும் போகும் பாதையும் ஒன்றுதான்
ஒன்று போல வேறுதான்.
சின்னச் சின்ன கைகுலுக்கல்கள், புன்னகைப்
பறிமாற்றம் எல்லாம் நிகழகிறது.
ஊருக்குப் போகும் போதுதான்
இருந்த ஊர் இன்னும் வசீகரிக்கிறது.
மனிதர்களை அப்போதுதான் காதலிக்கிறோம்
நமக்கான பறையிசையோ, முழவோ
தயார்
நம்மை வழியனுப்பவதில் ஊருக்கு எத்தனைக்
கொண்டாட்டம்.
இங்கிருந்து ஏதும் கொண்டு செல்ல முடியாது
ஆனாலும் பெட்டகங்கள் நிறைய பொருள்கள்
முன்பு இருந்த ஊர் என்றனர்
நம் முன்னோர் சென்ற ஊர் என்றனர்
நமக்கு அந்நியமானால் என்ன?
நாம் ஊருக்கு தயாராகி விட்டோம்
நாம் ஒருவரை ஒருவர் உற்றுப் பார்த்துக் கொள்வோம்.
அந்த ஊர் போனால் நம்
சொந்த அடையாளம் போய் விடும்
அந்த ஊர் சமீபிக்கும் போது
இந்த ஊரை விட்டு விடலாம்
இது வேறு மனிதர்களுக்காக.

நன்றி:அநாமிகா ரிஷி



சாந்தினி சந்திரன்

# அவனும் நானும்

ஆடி மாதம் தேடி வந்தது
அத்தனை நினைவும் மீண்டு
தந்தன தந்தன சொன்னதே

சட்டென விழிகள் கலந்ததே
அவன் காதலோ எனை
நில்லடி நில்லடி என்றதே

பார்த்து ரசித்து வேர்த்ததே
அவன் புன்சிரிப்பின் ஓரம்
கொல்லடி கொல்லடி என்றதே

எங்கு பிறந்தானோ ....
என் விழிகள் செய்த வரமா
மொழிகள் மறக்கமுன்
கூறடி கூறடி உன் காதலை

என்னை வென்றவன் மார்பிலே
கண்மூடி மயங்க முன்
கேளடி கேளடி அவன் பெயர் தனை


கனவினை கலைத்து
நிலவினை எழுப்பு
கண்டாயா அவனை
கட்டி அணைத்து
காதலை சொல்


சுற்றட்டும் பூமி
என் கனவும் உன் நிஜமும்
இணையும்போது -வா
வான்மயில்போல் ஆடிடுவோம்

பாரெல்லாம் கேளீர் எம் காதலை
பூவும் வேரும் முத்தமிட்டதை
புகழுடன் சொல்வேன்

அவன் மடியில் நான்.....
வெட்கத்தில் அவன்
சொர்க்கத்தில் நான்

எம் காதலை அவனிடம் கேளுங்கள்
தன் வரம்தனை
வரிசையாக சொல்லுவான்.


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆவணி - 2022


கார்த்திகை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
கவிதைச் சிறப்பிதழ்



மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
புரட்டாசி : 2024

# முந்தைய இதழ்கள்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
பங்குனி - 2024
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
ஆடி - 2024
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2023
சொக்கன் சிறப்பிதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
தை - 2023